விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினாறு — Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 தை 05 புதன்கிழமை (19.01.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 031

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து
RAMCO

# புலிகளின் முக்கிய தலைவர்கள் 50 பேர்
# கப்பல் மூலம் கனடாவுக்கு நுழைய முயற்சி!

## அந் நாட்டுப் பத்திரிகை அதிர்ச்சித் தகவல்

(கொழும்பு)

**விடுதலைப் புலிகளின் 50 தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் தென்கிழக்கு ஆசிய நாடொன்றிலிருந்து இரு கப்பல்களில் இலங்கையர்களுடன் கனடாவுக்குள் நுழையவுள்ளனர் என அந் நாட்டுப்பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.**

இது தொடர்பில் அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளுக்கான கேந்திர நிலையமாக கனடா மாறுவதாக உளவுத்துறை கனேடிய அரசாங்கத்தை எச்சரித்துள்ளது.

கனேடிய உளவுத்துறை மற்றும் பாதுகாப்புத்துறை உயர் அதிகாரிகளை மேற்கோள் காட்டி அது தொடர்பான செய்தியொன்றை கனேடிய பத்திரிகை வெளியிட்டுள்ளது. இது தொடர்பில் (16ஆம் பக்கம் பார்க்க)

## பல்கலைக்கழக மாணவர்களுக்கு முகாம்களில் தலைமைத்துவ பயிற்சி

(கொழும்பு)

உயர் கல்வியமைச்சு, பாதுகாப்பு அமைச்சுடன் இணைந்து புதிதாக தெரிவாகியுள்ள பல்கலைக்கழக மாணவர்களுக்கு இரு வார கால தலைமைத்துவ பயிற்சியை வழங்கத் தீர்மானித்துள்ளது. தெரிவு செய்யப்பட்ட இராணுவ முகாம்களில் இப்பயிற்சிகள் வழங்கப்படும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகும் மாணவர்கள் அனைவருக்கும் கருத்துக்களை முன் வைக்கும் திறமை, கற்பனை செய்தல், பிணக்குத் தீர்வு முதலானவற்றை முன்னேற்றிக்கொள்வதற்கு வாய்ப்பு கிடைக்கும் என உயர்கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி ஜயந்த தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

பல்கலைக்கழக மாணவர்கள் ஓரணியாக செயற்படுவதும் (16ஆம் பக்கம் பார்க்க)

## யாழில் அதிகரிக்கும் கொள்ளைச் சம்பவங்கள்; நேற்று மட்டும் 115 பவுண் நகைகள் அபகரிப்பு

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டில் நேற்று இரு வேறு இடங்களில் வீடு புகுந்து கூரிய ஆயுதம் மற்றும் துப்பாக்கியால் மிரட்டி சுமார் 115பவுண் தங்க நகைகள் அபகரிக்கப்பட்டுள்ளது.

இதில் கச்சேரி-நல்லூர் வீதியிலுள்ளவேலுப்பிள்ளைவேதநாயகம்என்பவரின் வீட்டில் நேற்று அதிகாலை 1.30 மணியளவில் 5பேர் கொண்ட கும்பல்கூரைபிரித்துவீட்டிற்குள் இறங்கியுள்ளனர்.

வீட்டில் உறக்கத்திலிருந்தவர்களை எழுப்பி கூரிய ஆயுதங்களைக் கொண்டு மிரட்டி அணிந்திருந்த நகைகளை அபகரித்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம்பொலிஸ்நிலையத்தில்முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இது இவ்வாறிருக்க சுழிபுரம் விசுவத்தனை வீதியிலுள்ள அரிய குட்டி தர்மலிங்கம் என்பவரின் வீட்டில்நேற்றுபிற்பகல்2.00மணியளவில் இனந்தெரியாத ஒருவர் சைக்கிளில் சென்றுள்ளார். (16ஆம்பக்கம்பார்க்க)

## முகாமில் உள்ள புலி உறுப்பினர்களை விடுவிக்க நால்வர் கொண்ட குழு!

### இன்று பூசாவிற்கு செல்கின்றது

(கொழும்பு)

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள விடுதலைப்புலி உறுப்பினர்களை விடுதலை செய்வது தொடர்பாக ஆராய்வதற்கென நால்வரடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும்நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழுவின் சிபார்சின் பேரில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அதற்கான உறுப்பினர்களை நியமித்துள்ளார். தடுப்புக்காவலில் இருக்கும் விடுதலைப் புலி சந்தேக நபர்கள் தொடர்பில் (16ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் 'சீ ஸ்கூட்டரை' ஓடி மகிழ்ந்த ஜனாதிபதி

(கொழும்பு)

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது விடுதலைப் புலிகளிடமிருந்து கடற்படையினரால் மீட்கப்பட்ட சீ ஸ்கூட்டர் (Sea Scooter) படகை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் காலை காங்கேசன்துறை கடலில் செலுத்தி மகிழ்ந்துள்ளார்.

சங்குப்பிட்டி கடல் பாலத்தை திறந்து வைப்பதற்காக கடந்த ஞாயிற்றுக்கிழமை குடாநாட்டிற்கு வருகை தந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அன்றிரவு காங்கேசன்துறை ஹோட்டல் ஒன்றில் தங்கினார்.

இந் நிலையில் மறுநாளான நேற்று முன்தினம் காலை காங்கேசன்துறை கடற்கரையில் உடற்பயிற்சியில் ஈடுபட்ட ஜனாதிபதி, கடற்படை யினரால் விடுதலைப் புலிகளிடமிருந்து மீட்கப் (16ஆம் பக்கம் பார்க்க)



(படம்-சுகத் சில்வர்)

## இடம்பெயர்ந்த முஸ்லிம்களில் 6000 பேர் யாழ். திரும்பினர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கு சுமார் ஆறாயிரம் முஸ்லிம்கள் சொந்த இடங்களுக்குத் திரும்பியிருப்பதாக யாழ். அரச அதிபர் தெரிவித்துள்ளார். இவ்வாறு வந்துள்ளவர்கள் யாழ்.நகரம், சாவகச்சேரி மற்றும் வேலணை ஆகிய பகுதிகளில் மீள்குடியமர்ந்துள்ளனர்.

கடந்த 1990ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளினால் யாழ்ப்பாணம் மற்றும் வட பகுதி மாவட்டங்களில் இருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம் மக்கள் மதவாச்சி அனுராத புரம், புத்தளம் போன்ற பல்வேறு இடங்களில் தஞ்சமடைந்திருந்தார்கள்.

விடுதலைப் புலிகளுடனான யுத்தம் முடிபடைந்ததன் பின்னர் இந்த முஸ்லிம் மக்கள் படிப்படியாக தமது சொந்த (16ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் அரங்கத்துடனான கூட்டுக்கு த.தே.கூட்டமைப்பிற்குள் எதிர்ப்பு

### தனித்து போட்டியிட கூட்டமைப்பு விருப்பம்

(கொழும்பு)

விரைவில் நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் தமிழ் கட்சிகள் அரங்கத்திலுள்ள சில கட்சிகளுடன் இணைந்து போட்டியிடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முடிபிற்கு கட்சிக்குள் எதிர்ப்பு கிளம்பியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தனித்து போட்டியிடும் சாத்தியம் காணப்படுவதாக கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை சிவாஜிலிங்கம் மற்றும் வரதராஜப் பெருமாள் ஆகியோரே அமைக்கப்படவுள்ள தேர்தல் கூட்டமைப்பில் இணைத்துக் கொள்ளா (16ஆம் பக்கம் பார்க்க)

## கொக்குவில் இராமகிருஷ்ண பழைய மாணவர் சங்கக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை பழைய மாணவர் சங்க விசேட பொதுக் கூட்டம் இன்று காலை 9.00 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் செல்வி க.கமல நாயகி தலைமையில் நடைபெறும்.

இவ்விசேட பொதுக் கூட்டத்தில் பழைய மாணவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அதிபர் கேட்டுள்ளார். (ந)

## தையல் பயிற்சிக்கு விண்ணப்பிக்க முடியும்

(யாழ்ப்பாணம்)

வட மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தினால் சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவில் இடம் பெறவுள்ள தையல் வேலையும், கைத்திறனும் பயிற்சி நெறிக்கு பயிலுநர்களை இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் இம் மாதம் 24ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

இப்பயிற்சி நெறி 6மாத கால முழு நேரப் பயிற்சியாகும். இவ் வருடம் இப்பயிற்சி நெறி வகுப்பு பண்டத்தரிப்பு தொழில் பயிற்சி நிலைய கட்டிடத்தில் இடம் பெறவுள்ளது.

எனவே மேற்படி பயிற்சிக்கான விண்ணப்பப்படிவங்கள் கிராம உத்தியோகத்தர்களிடமோ அல்லது மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்களிடமோ பிரதேச செயலகத்திலோ பெறலாம். அதனைப் பூர்த்தி செய்து பிரதேச செயலகத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (ந)

## நல்லிணக்க ஆணைக்குழுவின் அழைப்பை அலட்சியம் செய்தார் சந்திரிகா

(கொழும்பு)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக் குழு முன்னிலையில் சாட்சியமளிக்க வருமாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு விடுக்கப் பட்ட அழைப்பை அவர் அலட்சியம் செய்து வருவதாக ஆணைக்குழுவின் உறுப்பினரொருவர் தகவல் தெரிவித்துள்ளார்.

சாட்சியமளிக்க வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டு இரண்டு வாரங்கள் கழிந்த நிலையிலும் அது தொடர்பில் அவர் இதுவரை பதிலளிக்கவில்லை என்று கூறப் படுகின்றது.

அத்துடன் எதிர்வரும் காலங்களிலும் அவர் பதிலளிக்கவோ, சாட்சியமளிக்கவோ தயாராக இல்லை என்பதாக சந்திரிகாவுக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக வருவதைத் தடுப்பதற்காக தான் சர்வாதிகாரியாக நடந்து கொண்டிருந்தால் கூட நன்றாக இருக்கும் என்று அண்மையில் கருத்துத் தெரிவித்திருந்த சந்திரிகா இலங்கை போன்ற பல்லின மக்கள் வாழும் நாட்டுக்கு மகிந்த போன்றோர் ஜனாதிபதியாக இருப்பது எவ்வகையிலும் பொருத்தமற்றது என்று அண்மையில் கடுமையாகச் சாடியிருந்தார்.

அவ்வாறான நிலையில் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்டதன் காரணமாகவே அதன் அழைப்பை அவர் புறக்கணித்திருப்பதாக நம்பகமான தகவல்கள் தெரிவிக்கின்றன. (ந-5)

## மெனிக்பாம் முகாமில் இருந்து பெண்கள் கொழும்புக்கு பலவந்தமாக அனுப்பிவைப்பு

### சிவசக்தி ஆனந்தன் குற்றச்சாட்டு

(வவுனியா)

கொழும்பில் உள்ள ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றுவதற்காக வவுனியா மெனிக்பாம் முகாமில் இருந்து பெண்களும் சிறுமியரும் பலவந்தமாக அனுப்பி வைக்கப்படுகின்றனர் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் குற்றம் சுமத்தியுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக் கிழமையன்று 18பேரும், திங்களன்று 30 பேரும் வவுனியாவில் இருந்து அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஞாயிறன்று அனுப்பி வைக்கப் பட்ட 18பெண்பிள்ளைகளில் 5பேர் யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் ஆகிய இடங்களில் உள்ள ஆதரவற்ற சிறுவர் இல்லங்களில் இருந்து கல்வி கற்று வருபவர்களாவர்.

தைப்பொங்கலுக்காக மெனிக்பாமில் உள்ள தமது பெற்றோரை பார்க்க வந்தபோதே பலவந்தமாக இந்த சிறுமிகள் கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் குறித்த பெண் பிள்ளைகளின் பெற்றோர் தம்முடன் முறையிட்டுள்ளதாக சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார். (ந-5)

## மணியந்தோட்டத்தில் திறப்பு விழா

மணியந்தோட்டம் கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டிடத் திறப்பு விழா இன்று காலை நடைபெறும்.

நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் பிரதம விருந்தினராகவும், நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். (ந)

## தொடர்பு கொள்ளவும்

நல்ல நிலையில் உள்ள வளர்ப்பு நாயொன்று யாழ்.பண்ணைப் பகுதியை அண்மித்த இடமொன்றில் தஞ்சமடைந்துள்ளது.

நாயின் உரிமையாளர்கள் பின்வரும் தொலைபேசியுடன் தொடர்பு கொண்டு நாயை கூட்டிச் செல்லலாம். 0718474104 (இ)


## வலயக் கல்வி அலுவலகம், கிளிநொச்சி.
### உணவு சிற்றுண்டி வழங்குவதற்கான கூறுவிலை கோரல்

கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலகத்தால் நடத்தப்படவிருக்கும் நிகழ்ச்சித் திட்டங்களுக்கு உணவு, தேநீர், மென்பானம், சிற்றுண்டிகள் வழங்குவதற்கான கூறுவிலைகள் கோரப்படுகின்றன. இந்நிகழ்ச்சித்திட்டங்கள் பூநகரி, முழங்காவில், ஜெயபுரம், பளை, கண்டாவளை, முரசுமோட்டை, வட்டக்கச்சி, இராமநாதபுரம், பரந்தன், அக்கராயன், கிளிநொச்சி நகரம் ஆகிய பிரதேசங்களில் நடத்தப்படவிருப்பதால் மேற்படி பிரதேசங்களில் உணவுப் பொருட்களை வழங்க விரும்பும் வழங்குநர்களிடம் இருந்து கூறுவிலைகள் கோரப்படுகின்றது. மேற்படி உணவுப் பொருட்களை வழங்க விரும்பும் வழங்குநர்கள் இவற்றிற்கான விண்ணப்பப்படிவத்தை வலயக்கல்வி அலுவலகத்தின் நிதிக் கிளையில் 24.01.2011ந் திகதி முதல் காலை 10 மணிக்கும் 01 மணிக்கும் இடையில் ரூபா 100.00ஐ செலுத்தி விண்ணப்பப் படிவங்களை பெற்றுக்கொள்ள முடியும். பூர்த்தி செய்யப்பட்ட கூறுவிலை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி 02.02.2011 மதியம் 12மணியாகும்.

02.02.2011ந் திகதி மாலை 2.00மணிக்கு கூறுவிலைகள் திறக்கப்படும். அந்நேரத்தில் கூறுவிலைகள் சமர்ப்பித்தவர்கள் அல்லது அவர்களது அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் நேரில் சமுகமளிக்கலாம். மேலதிக விபரங்கள் விண்ணப்பப்படிவத்துடன் வழங்கப்படும்.

த.குருகுலராஜா
வலயக் கல்விப் பணிப்பாளர்,
வலயக் கல்வி அலுவலகம்,
கிளிநொச்சி.

(C-2203)

## சரவணா ரெக்ஸ் பணியாளர் வெற்றிடம்

ஊழியர்கள்:- அனுபவம் மிக்க ஆண் ஊழியர்கள் தேவை. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

நேரில் வரவும்.

770,772, கே.கே.எஸ் வீதி, தட்டாதெருச் சந்தி, யாழ்ப்பாணம்.

(C-2201)

## மனோதத்துவ வைத்தியம்
(General Psychotheraphy)

பிரபல மனோதத்துவ நிபுணர்

**Dr.P.ஆறுமுகம்**

T.P.: 0719315664 , 0777569205

**மீண்டும் யாழில்**

20.01.2011 முதல் 25.01.2011 வரை உடன் பதிவுகளை மேற்கொள்ளவும். பதிவுக் கட்டணம் ரூபா: 250/-

ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்கு திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்துமா, மாதவிடாய்க் கோளாறுகள், வெள்ளை படுதல், குழந்தைப் பேறின்மை, வாதநோய், தலையிடி, பல் முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு, கல்வியில் நாட்டம் குன்றிப் பயம், நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர) எந்தவித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோதத்துவரீதியில் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர்.

கமால் ரூரிஸ் இன் (சிவதர்சன் எலெக்ரிக்கல்ஸ் அருகில்)
வெலிங்டன் சந்திக்கும் பெருமாள் கோவிலுக்குமிடையில்,
392, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.

(C-2199)

## கராஜிற்கு ஆள் தேவை
மற்றும்
சைக்கிள் திருத்துநர் தேவை

### விற்பனைக்கு

இல. NPGS 3849 (புதியமொடல்) மற்றும் 500-9451 (பழைய மொடல்) 2சாலி மோட்டார்சைக்கிள் மற்றும் 2 கீரோ சாம் மோட்டார் சைக்கிளும் விற்பனைக்குண்டு.

பார்வையிடும் நேரம்: 3-5 மணி
தொடர்பு: விஜயகுமார்
217/7, கடைச்சாமி லேன், நீராவியடி, யாழ்ப்பாணம்.

(3345)

## EASY WAY ENGLISH ACADEMY
### SPOKEN ENGLISH with GRAMMAR

இலகு வழி ஆங்கிலக் கற்கைநெறி

புதிய வகுப்புகள் ஆரம்பம்

திகதி: 20.01.2011
நேரம்: பி.ப.3.00 மணி

(3546)

ஆண்டு 2 முதல் O/L மற்றும் A/L மாணவர்களிற்கான ஆங்கில வகுப்புகள் நடைபெறுகின்றன.

*குறிப்பு:* ஒவ்வொரு பிரிவிலும் மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள் மட்டுமே வழங்கப்படுவதால் பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும்.

துரை வீதி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

B.SUTHAHARAN
Director

## செல்லா சினிமா




ஆடுகளமா அசத்துறானய்யா... நம்மாளு...

காட்சி நேரம்: 10.30,2.30,6.30,9.30

## - தபால் மூலம் - ஆறு மாத கால டிப்ளோமா

Course Length - Six Month

JAN 2011 TO JUN 2011

தமிழ் மொழி மூலம்

| | |
|---|---|
| Dip. in Psychology | - உளவியல் டிப்ளோமா |
| Dip. in Office Administration | - காரியாலய நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Human Resources Management | - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Civil Engineering | - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா |
| Dip. in Business Management | - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Banking Management | - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Sales & Marketing Management | - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் டி.மா. |
| Dip. in Health & Hospital Management | - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை டி.மா. |
| Dip. in Nursing Administration | - தாதியர் நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Educational Management | - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Montessori | - மொண்டிசூரி டிப்ளோமா |

கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்

- கல்முனை • மட்டக்களப்பு • திருகோணமலை • புத்தளம்
- வவுனியா • மன்னார் • யாழ்ப்பாணம் • கண்டி • கொழும்பு
- ஹட்டன் • அனுராதபுரம் • நுவரெலியா

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.

Mobile: 0777 140 844, 071 803 48 48

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி

Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology, M.Sc. Psychology)

ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES
24, 1ST FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத் திகதி : 28.01.2011

## வெளிநாடுகளுக்கான கடிதங்கள், மற்றும் பொதிகள் சேவை



ARRUL GLOBAL EXPRESS
International Courier & Cargo Service

இல.01, பிறவுண் வீதி,
நாவலர் வீதி சந்தி, யாழ்ப்பாணம்

T.P :021 222 6113

அதிவிரைவு சேவை

லண்டன் 1Kg 650/= மட்டுமே

கனடா, அமெரிக்கா, பிரான்ஸ், சுவிஸ், ஜேர்மனி, இத்தாலி, நோர்வே, டென்மார்க் 1Kg 950/= மட்டுமே

# இன்று ஒரு தகவல்

## உடலும் உள்ளமும்

நம்மில் சிலர் தைரியமாக இருப்பார்கள். "அந்த ஆளிடம் வருவதற்கு எமன் கூடப் பயப்படுவான்" என்று சொல்வார்கள்.

தைரியசாலிகளை நெருங்குவதற்கு எமன் பயப்படுவான் என்று சொல்வது உண்மைதான். அது பொய்யில்லை. மனவலிமை மனிதனை காப்பாற்றும். இது மருத்துவ ரீதியான உண்மை.உடற்கோளாறுகள் மன ஆரோக்கியத்தைப் பாதிக்கும். இயக்கத்தில் மாறுதலை உண்டாக்கும். சிலவகையான நோய்களுக்கும் மனதுக்கும் இருக்கும் சம்பந்தம் என்னவென்பதை பற்றியெல்லாம் இப்பொழுது ஆராய்ச்சி செய்கிறார்கள்.

ஆஸ்மா– மூட்டுவலி–பெருங்குடல் அழற்சி– உயர் இரத்த அழுத்தம்–சோரியாஸீஸ் என்ற தோல்வியாதி –வயிற்றுப் புண் – தைரொய்ட் நச்சுத்தன்மை போன்ற நோய்களை உண்டாக்குவதில் மனதின் பங்கு என்னவென்பதை பற்றியெல்லாம் ஆய்வு செய்து பார்த்திருக்கிறார்கள். எதற்கெடுத்தாலும் சோர்ந்து போவது, துவண்டு போவது போன்ற மனவாகு யாரும் நமக்கு உதவ முடியாது என்ற மனோபாவம் (Helplessness), கைவிடப்பட்ட மனநிலை (Hopelessness) இவையெல்லாம் நோயின் தீவிரத்தை அதிகரிக்கச் செய்கிறதாம். இவர்களெல்லாம் கை கால்வலி, உடம்பு அசதியாக இருத்தல், தூக்கமின்மை, முதுகுவலி, உடம்பில் உணர்ச்சி குறைதல், கைகால் விரல்கள் மரத்துப் போதல்–இப்படி ஏதாவது சொல்லிக் கொண்டு டாக்டர்களை தேடி வந்து கொண்டிருக்கிறார்களாம். நெஞ்சுவலி யாருக்கு வருகிறது தெரியுமா?

பதற்றம், போட்டி மனப்பான்மை, அளவுக்கு அதிகமான வேகம், துடிப்பு பேராசை, எதிலும் கட்டுப்பாடு, நேரம் தவறாமை இதெல்லாம் உள்ளமனவாகு உள்ளவர்கள் பெரும்பாலும் நெஞ்சுவலிக்கு ஆளாகிவிடுகிறார்களாம்.

பிரீட்மேன் என்பவர் பல ஆராய்ச்சிகள் செய்து இதை உறுதிப்படுத்தியிருக்கிறார். அவர் பண்ணிய ஆராய்ச்சியில் என்னவெல்லாம் தெரிய வந்தது தெரியுமா? பொறுப்பு அதிகம் உள்ளவர்களுக்கும் கண்டிப்பாக உள்ளவர்களுக்கும் இரத்த அழுத்தம் அதிகரித்திருந்ததாம்.

இரத்த அழுத்தம் தனக்கு அதிகமாக இருப்பதை தெரிந்து கொண்டவர்கள் தலைவலி, மயக்கம் (தலைச்சுற்றல்), அசதி போன்ற உணர்வுகளால் வெறுக்கிறார்களாம்.

ஆனால் உண்மை என்னதெரியுமா? இதெல்லாம் இரத்த அழுத்தத்தினால் இல்லை. இரத்த அழுத்தம் கட்டுப்பாட்டுக்குள் இருந்தால் கூட இவர்கள் இப்படி நினைக்கிறார்களாம்.

இதற்குக் காரணம் மனம் தான் என்கிறார் அவர்.

சிலபேர் எப்படி தெரியுமா? ஒருத்தர் மாரடைப்பால் இறந்து போனார் என்று கேள்விப்பட்டால் போதும்! இறந்து போவதற்கு காரணம் இதயம் தான் என்ற பீதியால் இதயத் தளர்ச்சி என்ற (Cardiacneurosis) மனநோயால் பாதிக்கப்படுகிறார்கள். இவர்கள் அடிக்கடி தங்களுடைய இதயப் பகுதியை தொட்டுப்பார்த்துக் கொள்வார்கள். நாடியைப் பிடித்துப் பார்த்துக் கொள்வார். அடிக்கடி மூச்சை உள்ளிழுத்து வெளியேவிட்டு வலி வருகிறதா? என்று பார்த்து கொண்டிருப்பார்கள். வேறெங்காவது வலித்தால் கூட நெஞ்சு வலிக்கிறது என்று சொல்லிக் கொண்டிருப்பார்கள்,

ஆஸ்மாவுக்கும் மனதுக்கும் சம்பந்தமுண்டு. தீர்வுகாண முடியாத மனப்போராட்டங்கள், எல்லாவற்றிற்கும் பிறரையே சார்ந்திருக்கும் மனநிலை – இதெல்லாம் ஆஸ்மாவின் தீவிரத்தை அதிகப்படுத்தும். பயம்– என்ன நடக்குமோ என்ற பதற்ற நிலை இவையெல் லாம் சுவாசித்தலை அதிகரிக்கச் செய்கிறது அல்லவா... இதனால் இரத்தத்தின் காரத்தன்மை அதிகமாகி நோயின் தீவிரமும் அதிகமாகிறது.

மனப்போராட்டம் – மனக்கவலை – மன இறுக்கம் இவையெல்லாம் தோல்வியாதியை (சோரியாஸ்) கூடதூண்டி விடுகிறதாம். இதுமாதிரி இன்னமும் எவ்வளவோ இருக்கிறது. அதனால் இன்றைக்கு நமக்குத் தேவை மனவலிமை, மலர்ந்த முகம் இவையிரண்டும் இருந்து விட்டால் பலவிதமான நோய்கள் நம்மிடம் நெருங்கவே நெருங்காது.

டாக்டர் என்னை நெருங்காமல் இருப்பதற்கு நான் ஒரு காரியம் பண்ணுகிறேன்" என்றார் ஒருத்தர். என்ன? என்று கேட்டேன். தினமும் ஒரு அப்பிள் பழம் சாப்பிடுகிறேன் – (An apple a day Keeps Doctors a way என்றார்.

என்னை யாருமே நெருங்காமல் இருப்பதற்கு நான் ஒரு காரியம் பண்ணுறேன் என்றார் இன்னொருத்தர்.

அது என்ன? என்று கேட்டேன். தினமும் ஒரு பூண்டு சாப்பிடுகிறேன் என்றார் அவர்.

A garlic a day keeps everybody away

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# கிழக்கு மாகாண மக்களுக்கு அவுஸ்திரேலிய தமிழ்த்தொண்டு நிறுவனங்கள் உதவி

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கிழக்கு மாகாண தமிழ் மக்களுக்கு அவுஸ்திரேலிய தமிழ்த்தொண்டு நிறுவனங்கள் உதவிகளை வழங்கத் தீர்மானித்துள்ளன.

அவுஸ்திரேலியாவில் இயங்கும் தமிழ்த்தொண்டு நிறுவனங்களான அவுஸ்திரேலிய தமிழர் புனர்வாழ்வுக்கழகம், அவுஸ்திரேலிய மருத்துவ நிதியம் ஆகியன கிழக்கு மக்களிற்கான உதவிப் பணியில் தம்மையும் இணைத்துக் கொண்டுள்ளன.

இந்த உதவித் திட்டங்கள் சம்பந்தமாக அந்நிறுவனங்களின் சார்பாக வெளியிடப்பட்டுள்ள உத்தியோக பூர்வமான ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப் பட்டுள்ளது. இதில் மேலும் குறிப் பிடப் பட்டுள்ளதாவது;

போரினாலும் சுனாமியாலும் பெரும் அழிவுகளை சந்தித்த இலங்கையின் கிழக்கு மாகாண தமிழ்மக்கள் இப்போது வரலாற்றில் என்றுமில்லாத அளவிற்கு ஏற்பட்டிருக்கும் வெள்ளப் பெருக்கினாலும் பெரிதும் பாதிக்கப்பட்டுளனர்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு புலம்பெயர் நாடுகளில் உள்ள தமிழர்களால் உதவிகள் வழங்கப்படுகின்றன. அந்த வகையில் அவுஸ்திரேலிய தமிழ்த் தொண்டு நிறுவனங்கள் கிழக்கு மாகாண மக்களுக்கு அடிப்படை அத்தியாவசிய தேவைகளுக்காகவும் இலங்கையில் செயற்படும் தர்ம ஸ்தாபனங்களின் ஊடாக 16 இலட்சம் ரூபாவை முதற்கட்டமாக அனுப்பி வைத்துள்ளது(ஸ்ரீ–2)

# முன்பள்ளி கட்டட திறப்பு விழா

கோப்பாய் மத்தி வள்ளியம்மன் சனசமூக நிலைய முன் பள்ளி கட்டட திறப்பு விழா இன்று புதன்கிழமை காலை 11 மணிக்கு கோப்பாய் றோமன் கத்தோலிக்க பாடசாலை அதிபர் கு.திலீபன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக பாரம்பரிய கைத் தொழில் சிறுகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா, சிறப்பு விருந்தினராக கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபன்,வலிகாமம் கிழக்கு பிரதேசசபைச் செயலாளர் திருமதி ஜெயந்தா சோமராஜ், வலிகாமம் கிழக்கு முன்னாள் பிரதேச சபை செயலர் த.நடராஜா ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவ விருந்தினராக கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி அதிபர் எஸ். இராஜசேகரம், கோப்பாய் சரவணபவானந்தா வித்தியாலய அதிபர் ம.ஞானசம்பந்தன், வலி.கிழக்கு கோப்பாய் ஈ.பி.டி.பி அமைப்பாளர் இ.ஐங்கரன், கோப்பாய் மத்தி கிராமசேவகர் எஸ்.பாலசுந்தரம், கோப்பாய்பாலர் பகல் விடுதித்தலைவர் க. பரமானந்தராஜா ஆகியோர் கலந்து சிறப் பிக்கவுள்ளனர். (ஸ்ரீ–9)

# மஹா கும்பாபிஷேகம்

(பொலிகண்டி)

வல்வெட்டித்துறை ஆதிகோயிலடி ஆதிவைரவர் தேவஸ்தானத்தில் எதிர்வரும் 24 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10.09 மணிமுதல் 11 மணிவரையுள்ள சுபவேளையில் மஹா கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் நாளை வியாழக்கிழமை அதிகாலை 4.30 மணிக்கு விசேட கிரியைகள் ஆரம்பமாகி தொடர்ந்து 24 ஆம் திகதி திங்கட்கிழமை வரை நடைபெறவுள்ளது. அத்துடன் எண்ணெய் காப்பு சாத்தும் வைபவம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 8 மணி முதல் இரவு 10 மணிவரை நடைபெறவுள்ளது. (ஸ்ரீ–9–48)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 230 | 200 | 250 |
| உருளைக்கிழங்கு | 60 | 60 | 80 |
| பச்சைமிளகாய் | 300 | 350 | 500 |
| தக்காளி | 60 | 320 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 50 |
| கோவா | 100 | 80 | 120 |
| கரட் | 90 | 120 | 160 |
| பூசணி | 25-30 | 40 | 40 |
| புடோல் | -- | 100 | 100 |
| வாழைக்காய் | 35-40 | 50 | 30 |
| சின்ன வெங்காயம் | 300 | 300 | 300 |
| பெரிய வெங்காயம் | 130 | 120 | 150 |
| பாகற்காய் | -- | 200 | 300 |
| வெண்டிக்காய் | 100 | 120 | 160 |
| கருணைக் கிழங்கு | -- | 50 | 80 |
| பயற்றங்காய் | 240 | 250 | 300 |
| லீக்ஸ் | 100 | 120 | 160 |
| பீற்றூட் | -- | -- | 160 |
| கறிமிளகாய் | -- | 280 | 300 |
| முருங்கைக்காய் | -- | -- | -- |
| போஞ்சி | 220 | 180 | 200 |
| கத்தரிதம்புள்ள | -- | 150 | 200 |
| கீரை – 1 பிடி | 25 | 40 | 40 |
| தேசிக்காய் | 60-70 | 60 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 25-60 | 40 | 60 |

# இராசி பலன்

*19.01.2011*

*(தை 05, புதன்கிழமை)*

*சூரிய உதயம் காலை 6.28 மணிக்கு*

*பூரணை பின்னிரவு 3.36 மணிவரை*

*புனர்பூசம் பின்னிரவு 12.03 மணிவரை*

*இராகுகாலம் 12.35-2.05 மணிவரை*

*சுபநேரம் 5.05-6.35 மணிவரை*

*பூரணைவிரதம்*

**மேடம்** உடன்பிறப்புக்கள் வழியில் உதவிகள் கிடைக்கலாம், நீண்ட நாளைய பிரச்சினை ஒன்று நல்ல முடிவுக்கு வரும், சுப செய்திகள் வீடு வந்து சேரும்.

**இடபம்** பொருளாதார நிலை உயரும், மாற்றினத்தவர் மகிழ்ச்சியான செய்திகளை கொண்டு வந்து சேர்ப்பர், பெருமையடையும் சூழ்நிலை உருவாகும், ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும்.

**மிதுனம்** இறைவழிபாட்டில் இன்பம் காணவேண்டிய நாள், காணாமல் போன பொருளொன்று கைக் குக் கிடைக்கலாம், பெரியோர் சந்திப்புண்டு.

**கடகம்** அரசியல் செல்வாக்கு மேலோங்கும், குடும்பத்தினரை அனுசரித்து செல்வீர்கள், இடமாற்றத்தால் இனிய மாற்றம் காணவேண்டிய நாள்.

**சிங்கம்** வீட்டுக்கு விலையுயர்ந்த பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், செவி குளிரும் செய்திகள் வீடு வந்து சேரும்.

**கன்னி** கொள்கைப்பிடிப்போடு செயற்படும் நாள், பக்குவமாகப்பேசி காரியங்களைச் சாதிப்பீர்கள், அன்பு நண்பர்கள் ஆர்வத்துடன் உதவி செய்ய முன்வருவர், கனவுகள் நனவாகலாம்

**துலாம்** காரிய வெற்றிக்கு நண்பர்கள் கை கொடுத்து உதவுவர், தந்தை வழி உறவில் ஏற்பட்ட மனஸ்தாபம் குறையும், பொருளாதார நிலை உயர புதிய திட்டங்களைத் தீட்டுவீர்கள்.

**விருச்சிகம்** சிந்தித்து செயற்படுவதன் மூலம் சிறப்படைய வேண்டிய நாள் , தேவைக்கு பணப்பற்றாக் குறை ஏற் படலாம், ஆரோக்கியத் தில் அக்கறை கொள்ள வேண்டிய நாள்

**தனுசு** அரசு வழியில் அனுகூலமுண்டு, எடுத்த முயற்சி வெற்றி பெறும், தாராளமாக செலவிட்டு மகிழும் நாள், பிரயாண நன்மையுண்டு.

**மகரம்** உற்றார், உறவினர் கைகொடுத்துதவுவர், வருமதிகள் வந்து சேரலாம், நோய் குணமடையும், பகைவர்கள் மனம்மாறுவர், போசன சுகமுண்டு.

**கும்பம்** சுபசெய்திகள் வந்து சேரலாம், புதிய முயற்சிகளில் அக்கறை காட்டுவீர்கள், பிள்ளைகளால் பெருமையடையலாம், வியாபார விருத்தியுண்டு.

**மீனம்** எதிர்பார்ப்புக்கள் நிறைவேறலாம், தாய் வழிஉறவில் தகராறுகள் மறையும், வாகனயோகமுண்டு, பெரியோர் உதவியுண்டு.

வளவன்






*கலை அகம் அல்வாய் என்ற முகவரியில் அண்மையில் இடம்பெற்ற அவை (FORUM) -32 கலை இலக்கிய ஒன்றுகூடல் நிகழ்வில், தமிழகத்தின் பிரபல நாவலாசிரியர் கு.சின்னப்பபாரதி உரையாற்றுவதையும் மூத்த எழுத்தாளர் தெணியான் தலைமையுரையாற்றுவதையும் கவிஞர் வே.ஐ. வரதராஜன் அறிமுகவுரையாற்றுவதையும் நாவலாசிரியர் கு.சின்னப்பபாரதிக்கு ஜீவநதி- பிரதம ஆசிரியர் க.பரணீதரன் பொன்னாடை போர்த்தி கௌரவிப்பதையும் அருகில் கலைஞர் கலைச்செல்வன், கலாநிதி த. கலாமணி ஆகியோர் நிற்பதையும் படங்களில் காணலாம்.*

## மீள் புனரமைப்பு செய்யப்பட்ட புத்தூர் மீன்சந்தை ஆரம்பம்

(பருத்தித்துறை)

புத்தூர் பிரதேச சபையினரால் மீள் புனரமைப்புச் செய்த புத்தூர் மீன்சந்தை மீண்டும் செயற்பட ஆரம்பித்துள்ளது.

முன்னர் இச்சந்தை வெட்ட வெளியாக காணப்பட்ட போதிலும் தற்போது கதவுகள் பொருத்தி சுற்றிவர இரும்பு வலைகள் பொருத்தி பாதுகாப்பான சந்தையாக மீள புனரமைக்கப்பட்டிருப்பதை அவதானிக்க முடிகிறது.

நல்ல முறையில் காணப்படும் இச்சந்தையில் மீன் வியாபாரம் ஆரம்பிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-3-10)

## கடற்றொழிலாளர் கூ.ச.சமாசத்தின் புதிய கட்டடத் திறப்பு விழா

(பொற்பதி)

வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் புதிய கட்டடத்திறப்பு விழா நாளை வியாழக்கிழமை காலை 10 மணிக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் கொ. அ. ஸ்ரனிஸ்லாஸ் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா, சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி , பாராளுமன்ற உறுப்பினர்களான முருகேசு சந்திரகுமார் , சில்வேஸ்திரி அலென்ரின், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஸ்ரீ-3-64)

## பாடசாலை உணவு செயற்றிட்ட மாணவர் விபரம் கோரல்

(அல்வாய்)

பாடசாலை உணவுச் செயற்றிட்ட மாணவர் விபரத்தினை நாளை வியாழக்கிழமைக்கு முன்னர் கிடைக்க கூடியதாக வ. ஸ்ரீஸ்கந்தராஜா , பிரதிக்கல்விப் பணிப்பாளர் மாகாணக்கல்வி திணைக்களம், வடமாகாணம் , திருகோணமலை என்னும் முகவரிக்கு கிடைக்க கூடியதாக உடன் அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

இவ்விபரங்கள் உடன் கிடைக்காத சந்தர்ப்பத்தில் அப் பாடசாலைகளுக்கான பச்சை மரக்கறி கொடுப்பனவும் , வலயத்திற்கான நிர்வாகக் கொடுப்பனவும் வழங்குவதில் சிரமங்கள் ஏற்படும் என்பதை கவனத்தில் கொள்ளுமாறு வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-19)

## கிராம சேவகர்களுக்கான உள்ளூர் இடமாற்றங்கள் இரத்து

(பருத்தித்துறை)

வடமராட்சியில் உள்ள கிராம சேவகர்களுக்கு இவ்வருடம் வழங்கப்பட்ட உள்ளூர் இடமாற்றங்கள் எட்டு மாதங்களுக்கு இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

கரவெட்டி , பருத்தித்துறை பிரதேச.செயலகங்களில் உள்ள கிராம அலுவலர்களுக்கு இம்மாதம் முதல் உள்ளூர் இடமாற்றங்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும் இவ்வருடம் குடிசன மதிப்பீட்டுத் தொகை விபரம் எடுக்கப்படவிருப்பதால் எதிர்வரும் ஆவணி மாதம் வரை இரத்துச் செய்யப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-3-10)

## நேசா பவுண்டேசன் ஆரம்ப விழா

(யாழ்ப்பாணம்)

நேசா பவுண்டேசனின் ஆரம்ப விழா இன்று புதன்கிழமை மாலை 4 மணிக்கு யாழ். அளவெட்டி அருணாசலம் வித்தியாலய மண்டபத்தில் இப்பாடசாலை அதிபர் து. ஜெகநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகவில் பிரதம விருந்தினராக வலிகாம வலயக்கல்விப் பணிப்பாளர் ஆர். இராஜேந்திரன், சிறப்பு விருந்தினராக தெல்லிப்பளை கோட்டக் கல்விப்பணிப்பாளர் ச.கைலாசநாதன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவ விருந்தினராக ச.சுப்பிரமணியம் , நிர்வாக இயக்குநரின் தாயார் திருமதி ச.சண்முகராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஸ்ரீ-9-17)

## பாடசாலைகளுக்கிடையில் கடன் அடிப்படையில் உணவுப் பொருட்களை வழங்க அனுமதி

(அல்வாய்)

உலக உணவுத்திட்டத்தின் கீழ் படசாலை மாணவர்களுக்காண உணவு வழங்கல் யாழ். மாவட்ட பாடசாலைகளில் நடைமுறைப் படுத்தப்படுகின்றது.

இதுவரை தங்கள் வலயப் பாடசாலைகளில் ஏதாவது பாடசாலைகளுக்கு உணவுப் பொருட்கள் கிடைக்கப் பெறாவிட்டால் குறிப்பிட்ட பாடசாலைக்கு அண்மையில் உள்ள பாடசாலையில் மேலதிக உணவுப் பொருட்கள் காணப்படுமாயின் அவற்றை மாவட்ட செயலக உலக உணவுத்திட்ட அலுவலகத்தின் அனுமதியுடன் தேவைப்படும் பாடசாலைகளுக்கு கடன் அடிப்படையில் இடமாற்றம் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளதாக வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.




இவ் உணவுப் பொருட்களை குறித்த பாடசாலைக்கான உணவு விநியோகம் இடம் பெற்றதும் திரும்ப வழங்க வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் ஒரு மாணவனுக்கு உரிய உணவுப் பொருள்,அரிசி 80 கிராம், பருப்பு 25 கிராம், எண்ணெய் 15 கிராம், சமையல் தொண்டர்களுக்கான உணவு அரிசி 2 1/2 கிலோகிராம், பருப்பு 300 கிராம், சீனி 150 கிராம் இவ் அடிப்படையிலேயே உணவுப் பொருட்கள் வழங்கப்படவேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-3-19)

## நெற்கபே திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். கிளையினால் மக்களுக்கும் மாணவர்களுக்கும் சேவை செய்ய மேலும் ஒரு தற்காலத்துக்கேற்ப நவீன முறையில் ' Red MO' நெற்கபே பிறவுண் வீதி, கொக்குவிலில் (தொழில்நுட்பக் கல்லூரிக்கு அண்மையில்) நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு இச்சங்க யாழ். கிளையின் தலைவர் பேராசிரியர் வி.க.கணேசலிங்கம் தலைமையில் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீட பீடாதிபதி பேராசிரியர் க. தேவராஜா கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். (ஸ்ரீ-2)

## "தேடும் சிட்டுக்கள்" சஞ்சிகை வெளியீட்டு விழா

(கொழும்புத்துறை)

சுகவாழ்வு நிலையம் நடத்தும் ''தேடும் சிட்டுக்கள்'' என்னும் சிறுவர் கையேட்டு சஞ்சிகை வெளியீட்டு நிகழ்வு இன்று புதன் கிழமை காலை 9.30 மணிக்கு திருமறைக் கலாமன்ற கலைத்தூது கலையகத்தில் சுகவாழ்வு நிலைய இயக்குநர் அருட்தந்தை மி. செபமாலை பெரேரா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் கேட்டக்கல்வி பணிப்பாளர் வே. பாலசுப்பிரமணியம் மற்றும் சிறப்பு விருந்தினராக கோப்பாய் பிரதேச செயலக சிறுவர் உரிமை மேம்பாட்டு அலுவலர் திருமதி வரதீஸ்வரி சத்தியேஸ்வரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக யுனிசெப் சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் திருமதி சர்மிலி சதீஸ், கரித்தாஸ் கியூடெக் சிறுவர் நிகழ்ச்சித் திட்ட முகாமையாளர் அ.அஜந்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். இச் சஞ்சிகையை புதுத்தென்றல் சிறுவர் கழகம் செல்வி த.ஜெனனி வெளியிட்டு வைக்க முதற் பிரதியை பிரதம விருந்தினர் பெற்றுக் கொள்ளவுள்ளார்.

சஞ்சிகையின் மதிப்பீட்டுரையை திருமறைக்கலாமன்ற செயலர் எஸ். சதீஸ்குமார் நிகழ்த்தவுள்ளார். (ஸ்ரீ-3-51)

## செயற்குழுக் கூட்டம்

(கொழும்புத்துறை)

இலங்கை சர்வமத ஒத்துழைப்பு மற்றும் ஒருங்கிணைந்த சமூக வெளிப்பாட்டின் ஊடாக மனிதநேயத் தீர்வுக்கான சாத்தியமாக்கல் தொடர்பான செயற்குழுக்கூட்டம் எதிர்வரும் 22 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நல்லூர் புனித யாக்கோபு பாலர் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஸ்ரீ-3-51)

## பஜனை நிகழ்வுகள்

(சாவகச்சேரி)

மீசாலை சாயி சமித்தி பஜனை நிகழ்வுகள் பிரதி வியாழக்கிழமை தோறும் பிற்பகல் 4 மணி தொடக்கம் 5 மணிவரை நடைபெற்று வருகிறது.

இந்நிகழ்வு இன்று புதன்கிழமை பூரண தினத்தை முன்னிட்டு விசேட பஜனை நிகழ்வாக பிற்பகல் 4 மணி தொடக்கம் 5 மணி வரை நடைபெறவுள்ளது.

தொடர்ந்து விசேட பஜனை நிகழ்வுகள் மாதாந்தம் வரும் பூரண தினத்தில் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக பொறுப்பாளர் நந்தகுமாரன் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-3-29)

# UNIVERSITY OF JAFFNA
## BID NOTICE

The Chairman, University Procurement Committee, University of Jaffna will receive sealed bids from the qualified contractors for the following works.

| Work / Service Details | Security deposit (Rs.) | Non refundable deposit (Rs) | Approximate direct cost of the work(Rs.in Million) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|---|
| Improvements to parking Facilities Construction of Garages/ Rest room near Administration Building, University of Jaffna | 25,000.00 | 750.00 | 2.3 | C8 (Buildings) |

Bid forms may be obtained from the Deputy Registrar / Capital Works & Planning University of Jaffna upon producing valid registration book and receipt for the cash payment for the above bid fee at the Shroff's Counter, University of Jaffna till 01.02.2011.

Perfected bid should be sealed and marked with the job and the name of the work/ service on the top left hand corner of the envelop and sent by registered post to reach the registrar, University of Jaffna P.Box 57, Thirunelvely, Jaffna or could be deposited in the bid box kept at Registrar's Office, University of Jaffna.

Bids will be accepted till 2.00p.m on 07.02.2011 and open immediately thereafter.

Bidders or their accredited representatives could be present at the time of opening of tenders.

Bid forms may be inspected by the Bidders free of charge at the Capital Works & Planning Branch of this University during office hours, if necessary.

**P.O.Box 57,**
**Thirunelvely, Jaffna.**
**18.01.2011**

**Registrar,**
**University of Jaffna.**

(C-2197)

# 6 வருடத்தில் தகவல் தொழில்நுட்ப துறையில் பாரிய புரட்சி ஏற்படும்

## தொலைத்தொடர்பு தகவல் தொழில்நுட்ப அமைச்சின் செயலர் தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் 6 வருட காலத்தில் நாட்டின் தகவல் தொழில்நுட்பத்துறையில் பாரிய அளவிலான புரட்சி ஏற்படும் என்று தொலைத் தொடர்பு தகவல் தொழில்நுட்ப அமைச்சின் செயலாளர் நிமல் ஆனந்த அத்துக்கோரல தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மகிந்த சிந்தனையில் தகவல் மற்றும் தொலைத்தொடர்பு தொழில்நுட்பத்திற்கு முக்கிய இடம் அளிக்கப்பட்டுள்ளது.

அடுத்த 6 வருட காலத்திற்குள் 75 சதவீதமான மக்களுக்கு தகவல் தொழில்நுட்ப அறிவை வழங்குவது அரசாங்கத்தின் நோக்கமாகும். தகவல் தொழில்நுட்பம் சம்பந்தமான தேசியக் கொள்கை நடைமுறைப்படுத்தப்பட்டதும் இந்த நோக்கம் நிறைவேற்றப்படும்.

பாடசாலை கல்வித்திட்டங்களில் தகவல் தொழில்நுட்பம் ஏற்கனவே அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் அடிப்படையில் உலக நாடுகளில் தங்கி இருக்கும் இலங்கைக் கல்விமான்களினதும் நிபுணர்களினதும் அனுதாபத்தையும் இணையத்தளத்தின் மூலம் பெறுவதற்கான வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.

அரச ஊழியர்களுக்கும் தகவல் தொழில்நுட்ப அறிவு வழங்கப்படும். நிருசல மற்றும் விதாதா நிலையங்களின் மூலம் தகவல் தொழில்நுட்ப அறிவு கிராமக்களுக்கு வழங்கப்படுகின்றது.

இத்தகைய சகல திட்டங்களும் வட மாகாணத்தில் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-9)

# நாமல்-கடாபி சந்திப்பு

(கொழும்பு)



லிபியாவுக்கான உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ள பாராளுமன்ற உறுப்பினரும் இளைஞர்களுக்கான நாளைய அமைப்பின் தலைவருமான நாமல் ராஜபக்ஷ நேற்று முன்தினம் லிபியத் தலைவர் கேர்ணல் மு அவ்வர் அல் கடாபியைச் சந்தித்தார்.

இந்தச் சந்திப்பின் போது இரு நாடுகளுக்குமிடையிலான நட்பு குறித்து இருவரும் கலந்துரையாடினர்.

பாராளுமன்ற உறுப்பினர்களான சஜின் டி வாஸ் குணவர்தன மற்றும் துமிந்த சில்வா ஆகியோரும் நாமல் ராஜபக்ஷவுடன் கலந்து கொண்டனர். (ஸ்ரீ-2)


# அருள்மிகு இனுவில் கந்தசாமி கோவில்
# தைப்பூசப் பெருமஞ்சத் திருவிழா

காலம் :- நாளை 20.01.2011 மாலை 6.30 மணிக்கு
வசந்த மண்டபப் பூசை இடம் பெற்று மின்சார தீபங்களால் அலங்கரிக்கப்பட்ட
உலகப் பெருமஞ்சத்தில் முருகப்பெருமான் திருவீதி உலா வரும்
காட்சியும் விசேட மேளக்கச்சேரியும் இடம்பெறும்.

- முருகனடியார்கள் அனைவரும் உலகப் பெருமஞ்ச வடம் தொட்டிழுக்க வாரீர்.
- உலகின் எப்பாகத்திலிருந்தும் மஞ்சக் காட்சியினை www.sivancv.com எனும் இணையத்தினூடாக நேரலையாக இரவு 6.30 தொடக்கம் 9.30 மணி வரை பார்வையிடலாம்.



உலகப் பெருமஞ்சம்

(சி-2197)

சுவையான உணவைப் பெற்றிட நாடுகள்
வாணி உணவகம்
திருநெல்வேலி சந்தி

கிருபா லேணர்ஸ் (L)
தலைமை: 226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ. பே: 021 222 4353
0777225292
கிளை: மகாத்மா வீதி, நெல்லியடி.
தொ. பே: 021 3006550

அனைத்து வகையான மோட்டார் சைக்கிள் உதிரிப் பாகங்கள், சீற், சீமெந்து, என்பவற்றைப் பெற்றிட நாடுங்கள்
கஜமுகன் மோட்டோர்ஸ்
K.K.S வீதி, இணுவில்.

Chemistry Center
ஆசிரியர் :- சிவகுமார்

முத்து, பூ மணவறை ,மாலை என்பவற்றை பெற்றிட நாடுங்கள்
கண்ணன் ஐயா
புளியடி வைரவர் வீதி, இணுவில்.






இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இந்திய விமானப் படைத்தளபதி எயார் சீப் மார்ஷல் பி.வி.நாயக் நேற்று முன்தினம் இலங்கை விமானப்படைத் தலைமையகத்துக்கு சென்றபோது இலங்கை விமானப் படையினர் அணிவகுப்பு மரியாதை செய்வதையும் இலங்கை விமானப் படைத்தளபதி எயார் சீப்மார்ஷல் றொசான் குணதிலகவை சந்தித்து கைலாகு கொடுப்பதையும் படங்களில் காணலாம்.

# மூளைக்கட்டியால் பாதிக்கப்பட்ட தமிழ் சிறுவன் மீது நெதர்லாந்து அரசாங்கம் கரிசனை

மூளைக்கட்டி நோயால் பாதிக்கப்பட்டு இருக்கும் அபிராம் பரமேஸ்வரன் (வயது 8) என்ற இலங்கைத் தமிழ் சிறுவனுக்கு வதிவிட விசா வழங்குகின்றமை குறித்து நெதர்லாந்து அரசு சாதகமாக பரிசீலித்து வருகின்றது.

இவரும் தாயும் நெதர்லாந்தில் கடந்த் ஏழு வருடங்களாக வாழ்கின்றனர். சிறுவன் மரணத்தின் தறுவாயில் இருக்கின்றார். ஆனால், இவர்களுக்கு வதிவிட விசா நிராகரிக்கப்பட்டு விட்டது. எந்நேரமும் இவர்கள் நாடு கடத்தப்படக்கூடிய நிலையே இருந்து வந்துள்ளது.

இந்நிலையில் மனிதாபிமான அடிப்படையில் சிறுவன் மற்றும் தாயின் விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று பல்வேறு தரப்பினரிடம் இருந்தும் நெதர்லாந்து அரசுக்கு அழுத்தம் பிரயோகிக்கப்பட்டு வருகின்றது.

சிறுவன் பயிலும் பாடசாலை இவ்விடயத்தில் மிகவும் மும்முரமாக உள்ளது. அத்துடன் எதிர்க்கட்சிகள் இச்சிறுவன் விடயத்தில் அரசு மனித நேயத்துடன் நடந்து கொள்ள வேண்டும் என்று வலியுறுத்துகின்றது.

எதிர்க்கட்சி எம்.பி.க்கள் இது குறித்து குடிவரவு அமைச்சரின் நிலைப்பாட்டை வினவ உள்ளன. இச்சூழ்நிலையில் சிறுவன், தாய் ஆகியோரின் விண்ணப்பங்கள் சாதகமாக பரிசீலிக்கப்படும் என்று அந்நாட்டு குடிவரவு அமைச்சர் கேர்ட் லீர்ஸ் தெரிவித்துள்ளார்.

இதேநேரம் நோய்வாய்ப்பட்டு இருக்கும் சிறுவனை நேரில் வந்து பார்க்க சிறுவனின் அம்மம்மா விசா அனுமதி கோரி விண்ணப்பித்துள்ளார். இவ்விண்ணப்பமும் சாதகமாக பரிசீலிக்கப்படும் என்று குடிவரவு அமைச்சர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# இலங்கையில் புகையிலை செய்கைக்கு தடை விதிக்கப்படவுள்ளது

விவசாயிகளுக்கு உணவுத் தானிய செய்கையை ஊக்குவிக்க அரசாங்கம் புதிய நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டுள்ளது.

இதனால் எதிர்காலத்தில் இலங்கையில் புகையிலை செய்கைக்கு தடை விதிக்கப் போவதாக விவசாயத்துறை அமைச்சர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

அதனால் புகையிலை செய்கைக்கான உரமானியத்தையும்நிறுத்துவதற்குநடவடிக்கை எடுக்கப்படுமெனவும் உணவுத் தானியங்களை உற்பத்தி செய்வதில் விவசாயிகளின் கவனத்தை திருப்புவதே இதன் நோக்கம் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எது எவ்வாறெனினும் இலங்கையின் பல பகுதிகள் உட்பட குறிப்பாக யாழ். குடாநாட்டிலும் பணப்பயிராக பெருமளவு இலாப மீட்டுகின்ற பயிர்ச் செய்கையாக புகையிலைச் செய்கை ஏராளமான நிலப்பரப்பில் பயிரிடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# அம்பாறையில் வெடிபொருட்கள் மீட்பு

அம்பாறை மாவட்டம் திருக்கோவில் பிரதேசத்தின் ஸ்ரீவள்ளிபுர பாவட்டக்குளம் பகுதியில் வெடிபொருட்கள் சில மீட்கப் பட்டுள்ளன.

திருக்கோவில் பொலிஸார் குறித்த இடத்தில் மேற்கொண்ட திடீர் சோதனையை அடுத்தே இந்த வெடிபொருட்கள் மீட்கப் பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மீட்கப்பட்ட வெடிபொருட்களுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லையென தெரிவித்த திருக்கோவில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்து வருவதாகக் குறிப்பிட்டனர்.

இந்த வெடிபொருட்களில் 9 கைக் குண்டுகள், 3 ரி-56 துப்பாக்கிக்கு பயன்படுத்தப்படும் மெகஸின்கள் , ரி-56 ரக துப்பாக்கிக்கு பயன்படுத்தப்படும் 69 தோட்டாக்கள், வோக்கி டோக்கி ஒன்று, காடுகளுக்கு உசிதமாக பயன்படுத்தப்படும் உடைப் பொதியொன்றும் அடங்குவதாக அவர்கள் தெரிவிக்கின்றனர். (ஸ்ரீ-2)

# ஸ்ரீ அம்மா பகவானின் பாதபூஜை நிகழ்வு

ஸ்ரீ அம்மா பகவான் பாதபூஜை நிகழ்வு எதிர்வரும் 22 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு சுழிபுரம் ஸ்ரீ அம்மா பகவான் சற்சங்க ஆன்மீக பிரார்த்தனை மையத்தில் நடைபெறவுள்ளது.

மேலும் வேலை,வியாபாரம், தொழில் விருத்திக்கான பிரார்த்தனை நிகழ்வும் நடை பெறவுள்ளதால் அடியார்கள் அனைவரையும் கலந்து கொண்டு அருள் ஆசியினைப் பெற்றுக் கொள்ளுமாறு பிரார்த்தனை மையத்தினர் கேட்டுள்ளனர். (ஸ்ரீ-3)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

**சீதேவிச் செங்கழுநீர்/ நெய்ச்சட்டிக் கீரை**

**Botanical Name - Vernonia cineria**
**Family - Compositae**
**Engl - Ash-Coloured fleabane**
**Sinh - Monera Kudimbiya**

இது சுமார் ஒரு மீற்றர் நீளம் வரைக்கும் பல கிளைகளுடன் சிறிது படர்ந்தாற்போல வளருகிறது.இதன் குச்சிகள் அரக்கு நிறச் சிவப்புடையன. சில இலைகள் நல்ல பசுமை நிறமுடையனவாகவும், வேறுசில முதிர்ந்த இலைகள் ஓரங்களில் சிவப்பு நிறம் பெற்றிருக்கும்.

சுமார் 3 முதல் 5 செ.மீ.நீளமும், ஒன்று முதல் 1.5 செ.மீ அகலமும் உள்ள தும். சிறிது தடிப்புமுள்ள இலைகள் சிறிது சுருங்கி நெளிந்து இருக்கும். அடிப்பாகம் அகன்றும், நுனி கூர்மையாகவும் சுமார் ஈட்டி வடிவம் பெற்றிருக்கிறது.

நல்ல மெல்லிய ஊதா நிற பூக்களின் நடுவே சிறிது மஞ்சள் நிறமும் தோன்றுகிறது. பூக்கள் கொத்தாக பூக்கும்.மிளகு போன்ற காய்கள் முத்துக் கோர்த்தாப் போல் கொத்தாகச் சேர்ந்திருக்கின்றன.

மங்கிய கறுப்பான கடுகைப் போல் ஒன்றரை மடங்கு பருமனுள்ள முப்பட்டை விதைகள் சுமார் 4,5 விதைகள் ஒரு நெற்றினுள்ளிருக்கும். இது ஒரு ஓராண்டுப் பயிராகும்.

**பரம்பலும், இனவிருத்தியும்:**

இது எங்கும் சுயமாகவே முளைத்து வளருவதைக் காணலாம். எல்லா மண்ணிலும் வளரக்கூடிய தன்மையுடையது. விதைகள் மூலம் இனவிருத்தி செய்யலாம். சிறு கன்றுகளை பிடுங்கி 1/2 மீ ஒன்றாக நடலாம்.



கூடிய மழைக்குப் பின் இதை அதிகமாகக் காணலாம்.

**மருத்துவப்பயன்கள்**

ண இதில் சிறியளவு துவர்ப்பும் கசப்பும் வழுவழுப்பும் உண்டு. சுமாரான சுவையுடையது. சிறிது கடினமான சக்கை கொஞ்சமதிகம் எனலாம். 50 கிராம் கீரையை 75 கிராம் முளைக்கீரை இனக் கீரையுடன் சேர்த்து சமைக்கலாம். 50 கிராம் கீரையை 20 கிராம் தேங்காய், 80 கிராம் தானிய மாவுடன் அடை தயாரிக்கலாம். உடலிற்கு குளிர்ச்சியை கொடுக் கும். ஆண்மையை பெருக்கும்.

ண இதனை நெய்ச்சட்டிக்கீரை என்றும் கூறுவர். காரணம் இக் கீரையை மண்சட்டியில் கடைந்து சமைக்கும் போது சட்டியில் நெய் பெயர்ந்திருக்கும். இந்நெய்க் கீரையானது பித்த நோய்களையும், உடலில் ஏற்படும் உஷ்ணத்தையும் தணிக்க வல்லது. இதனாலேயே நெய்சட்டிக்கீரை என்று அழைப்பர். உடலிற்கு ஆற்றலை கொடுக்கக் கூடியது. விடத்தை முறிக்கும். தாது விருத்தி உண்டு பண்ணும். உடலிற்கு வனப்பை கொடுக்கும். வெள்ளை சாய்தலை தீர்க்கும்.

ண நீரடிமுத்து எண்ணெய் ஒரு லீற்றர் வாணலியில் ஊற்றி 250 கிராம் அளவு கீரையை இட்டு பொரித்து எடுத்து அதன் பின் வாய்விளங்கம் 300 கிராம் இட்டு எரித்து வடிகட்டி வைக்கவும். சொறி,சிரங்கு, தேமல், படை, வெடிப்பு ஆகியவற்றிக்கு மேற் பூச்சாக பயன்படுத்த நோய் குண மாகும்.

ண இளஞ்செடி ஒரு பிடி எடுத்து 1/2லீற்றர் நீரில் காய்ச்சிய குடிநீரை காலை, மாலை 3 நாள் குடிக்கக் கொடுக்க பித்தசுரம் நீங்கும்.

ண இலைகளை அரைத்து பூச நரம்புச் சிலந்தி குணமாகும்.

ண இதன் பூக்களை கசக்கி சொட்டுமருந்தாக கண்ணில்விட கண்சிவப்பு, வலி, எரிச்சல் குணமாகும்.

ண வேர் 100 கிராம் எடுத்து 500 மில்லி நீரில் காய்ச்சி வடித்து குடிநீர் 50 மில்லி இருவேளை குடிக்கக் கொடுக்க கட்டிகள் கரையும்.

ண வேருடன் பிடுங்கி இடித்த சாறு ஒரு லீற்றர், நல்லெண்ணெய் ஒரு லீற்றர் சேர்த்துக் காய்ச்சி வாரம் இருமுறை தலைக்கு தேய்த்துக் கொண்டால் கண்ளரிச்சல், உடல் வெப்பம் தீரும். கண்ணிற்கு குளிர்ச்சியைத் தரும்.

ண சீதேவி செங்கழுநீர், நிலவூமத்தை,
செம்மையாய் எருக்குடன், விஷ்ணுக்கிரந்தி
நன்மை பெறக் கடுஞ்செம்பை , வெள்ளைக்
குன்றி நானிலத்தில் தகரையுடன் உருவியாமே.

**டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன் (M.D.C.S.)**
**சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை,**
**யாழ். பல்கலைக்கழகம், கைதடி.**

அகத்தியர் செய்யுள் இது. இதில் கூறப்பட்ட மூலிகைகள் எல்லாம் வசியத்திற்கு பயன்படுவனவாகும்.

ண இதன் இலைகளை நன்றாக அரைத்து, எலுமிச்சம்பழச்சாறு கலந்து தோல் நோய் களுக்கு பூசலாம். அல்லது கீரையாக கடைந்து சாப்பிட்டாலும் தோல் நோய்கள் வராமல் தடுக்கலாம். அல்லது இக்கீரையை பருப்புடன் சேர்த்து சமைத்து சாப்பிடலாம்.

# கள்ளிக்காட்டு இதிகாசம்





கவிப்பேரரசு வைரமுத்து

20

அழகம்மாள் இறந்த செய்தி காடு கரையெல்லாம் பரவிட்டது காற்றோடு பரவும் காட்டுத்தீ மாதிரி. சொக்கத்தேவம்பட்டி-பசுக்காரம்பட்டி-திருமலாபுரம்-அரைப்படித் தேவன்பட்டி-குருவியப்பன்பட்டி முதலான ஊர்களிலிருந்தெல்லாம் முந்தாணை இழுத்து முக்காடுபோட்டு பெண்களும், கொஞ்சம் வசதி படைத்த குடைக்காரர்களும், போட்டது போட்டபடி விட்டுவிட்டு நேர்பாதை நேரமாகுமென்று கம்பங்காடு சோளங்காடு மொச்சைக்காட்டு வரப்புகளையே வழிகளாக்கி நடந்தோடி வந்தார்கள் கள்ளிப்பட்டி நோக்கி.

"தேவதானப்பட்டி பெரியகருப்புக்குத் தகவல் சொல்லியாச்சா...?" "ஒத்தவீட்டுச் செகிலிக்கு ஆள்விட்டாச்சா?" "ஏலே சீனி! யார்ரா அவன் பந்தக்காரன்? இன்னும் கா மணி நேரத்துல போட்டு முடிக்கல... காசு வாங்கமாட்ட ஆமா"

"கொட்டுக்காரனக் கூப்புடப்போனவன் யாரப்பா?"

"நம்ம பன்னியான் மகன் சன்னாசி..."

"அவனா...? அவன் பித்துக்காலனாச்சே! அவன் இழுத்து நடந்து எழவு சொல்லி முடிக்கக் கருமாதியே வந்திருமே!"

"சரி... அவந்தான் பித்துக்காலன். வருசநாட்டு வேங்க நீ போறது...?"

"ஏய் வெட்டிப்பேச்சுப் பேசாம வேலையப் பாருங்கப்பா..."

-இப்படி வீட்டு வாசலில் வெவ்வேறு குரல்கள்.

அடிபிடி சண்டையிலும் ஆளுக்கொரு கடமை நடந்து கொண்டுதானிருந்தது.

நடைபாதைத் திண்ணையில் ஏறி, சுவரில் முதுகமுந்த உட்கார்ந்திருந்த பேயத்தேவர், "நாயக்கருக்குக் காப்பித் தண்ணி கொண்டாங்கடா... ஏலே" என்று தொண்டைகட்டிய குரலில் உத்தரவிட்டுவிட்டு "சொந்தபந்தமெல்லாம் வந்து சேரணுமில்ல... நாளைக்குத்தான் 'எடுக்கணும்" என்று முணுமுணுத்துக் கொண்டார்.

"ஏ பொம்பளைகளா! பொலபொலன்னு அழுதுக்கிட்டிருக்காம பொணத்தக் குளுப்பாட்டுங்கடி மொதல்ல" முதுமையின் கூன் விழுந்து மூன்றே முக்கால் அடியாய்ச் சுருங்கிப்போன ஒரு கிழவி பல்லில்லாத வார்த்தை பேசினாள் "யாத்தே! அப்பத்தே!" என்று ராகமாக அழுதவர்களெல்லாம் கரண்ட்டுபோன ரேடியோ மாதிரி கச்சேரியைச் சட்டென்று நிறுத்திவிட்டுப் பிணம் குளிப்பாட்டத் தயாரானார்கள்.

"ஆம்பளைகல்லாம் வெளிய போங்கப்பா. ஆத்தாளக் குளிப்பாட்டப் போறோம்"-ஒருத்தி கூவினாள்.

நடைவாசல் திண்ணையில் உட்கார்ந்திருந்த பேயத்தேவர் நாய்க்கர் உட்பட எல்லாரும் தங்கள் சோகத்தையும் கூட்டிக்கொண்டு வெளியேறினார்கள்.

ஒரே ஓர் உருமாக்கட்டுக் கிழவர் மட்டும் தன் கைத்தடியில் மோவாய் பதித்து ஆழ்ந்த யோசனையில் 'அங்கிட்டும் இங்கிட்டும்' தலையாட்டிக் கொண்டிருந்தார்.

பெருசுக்குப் பாவம் காது கேட்காது!

"ஏ குப்பணம்பட்டிப் பெருசு! ஆம்பளைகல்லாம் போயிட்டாகல்ல... நீ ஆம்பளையில்லையா. ஏந்திரிச்சிப் போறியா... இல்ல சங்க ஒங் காதுல வந்து ஊதவா?" -சண்டைக்காரிமாதிரி சத்தம் போட்டாள் இன்னொருத்தி.

அங்கிருக்கக்கூடாது என்பதை அனுமானத்தால் உணர்ந்துகொண்ட பெருசு தன் உடம்பையும் உசுரையும் கைத்தடிக்கு மாற்றி ஓசையில்லாமல் ஊர்ந்தார்.

உள்ளிருந்த ஆண்கள் வெளியே வந்ததில் ரசிகர்கள் கிடைத்துவிட்ட உற்சாகத்தில் தன் உயிர் மூச்சையெல்லாம் ஊற்றி ஊதித் திறமைகாட்டினான் சங்கூதுபவன். பாவம்! வாழ்க்கையின் சோகங்களில் மட்டுமே வாய்ப்பும் வருமானமும் பெறும் இழவுக் கலைஞன்.

ஊர் எல்லைவரை அடுத்தவீட்டுப் பொறணிகளையும் அடகுவச்ச தண்டட்டி முழுகிப்போன கதைகளையும் தீபாவளிக்கு எடுத்த சேலை பொங்கலுக்குச் சாயம் போன கூத்தையும் சலசலவென்று பேசிக்கொண்டே வரும் பொம்பளைகள், ஊர் எல்லை மிதித்தவுடன் முக்காட்டை எடுத்து அதை இழுத்து உதறி, இறுக்கமாய் இடுப்பில் செருகிக் கொண்டு-அதுவரைக்கும் இருந்த உற்சாகம் சிரிப்பையெல்லாம் வெற்றிலையோடு சேர்த்துத் துப்பிவிட்டு சட்டென்று சோகத்துக்குள் கூடுவிட்டுக் கூடுபாய்ந்து-"ஆத்தா போயிட்டியே! ஆலமரம் சாஞ்சிருச்சே" என்று எட்டுக்கட்டையில் ஏறி இரண்டு கட்டைக்கு இறங்கிக் கொசுவம் குதிக்க ஓடிவந்தார்கள்.

தெருவில் கிடந்த பெஞ்சுகளில் யானை ஏற்றம் குதிரை ஏற்றம் பயின்று கொண்டிருந்த சின்னஞ்சிறுசுகளை, தோளில் கிடந்த துண்டால் அடித்து விரட்டிக்கொண்டிருந்தான் ஒருவன்.

உள்ளே பொம்பளைகளாகச் சேர்த்து புடவைகளால் கட்டிய தடுப்பு மறைப்பில் குளிப்பாட்டப்பட்டுக் கொண்டிருந்தாள் அழகம்மாள்.

"பொறந்த பேத்திக்குத் தண்ணி ஊத்தின கையால பொணத்தையும் குளிப்பாட்ட வச்சிட்டயே தாயி"

ஊற்றிய குடத்து நீர் தீர்ந்ததும் தெரியாமல் குடத்தை உயர்த்தியே பிடித்துக் கொண்டு குலுங்கியழுதாள் முருகாயி.

குடத்துநீர் தீர்ந்துவிட்டது. கண்ணீர்...?

"பேத்தியப் பாத்துட்டுத்தான் சாகணும்னு உசுரக் கையில புடிச்சு ஒக்காந்திருந்தியா ஆத்தா?"-பிணத்தின் பிறந்தமேனியில் விழுந்து பால்கட்டிய மார்பில் அடித்துக் கொண்டு அழுதாள் செல்லத்தாயி.

"ஏ செல்லத்தாயி! நல்லசாவுதான செத்துருக்கா ஆத்தா; பச்சப்புள்ளக்காரி அழுகாதம்மா"

அப்போதுதான் குழந்தை ஞாபகம் வந்த செல்லத்தாயி பிணம் மறந்து பிள்ளை தேடினாள்.

"எங்க எம் பிள்ள? எங்க எம் பிள்ள?"-அழுது கொண்டே கூட்டத்தில் நழுவி, பொம்பளைகளை ஊடறுத்துத் தொட்டில் நோக்கி முன்னேறினாள்.

சேலையில் கட்டிய தொட்டில் காற்றாடிக் கொண்டிருந்தது உள்ளீடில்லாமல்.

"எங்கபோச்சு எம்பிள்ள? என்னாச்சு எம்பிள்ளைக்கு?"

அடிவயிற்றில் நெருப்பின் கொழுந்தொன்று படீரென்று விரிய, நாலாபுறமும் அவள் பதறியடித்துப் பார்த்தபோது அவசரத்திலும் அவலத்திலும் மறக்கப்பட்ட குழந்தையை, கங்காரு தன் குட்டியை வைத்திருப்பதுபோல் தாங்கிப் பிடித்தபடி, தன் மடியில் பத்திரமாய் வைத்துக்கொண்டு, தவிட்டு மூட்டைமேல் அழுதுகொண்டே உட்கார்ந்திருந்தான் மொக்கராசு.

செல்லத்தாயி வயிற்றில் எரியத் தொடங்கி நெஞ்சுவரைக்கும் கொழுந்துவிட்ட நெருப்பு குப்பென்று அணைந்து குளிர்ந்தது. இப்போதும் அவள் அழுதாள். இழவு வீட்டில் சிந்தப்பட்ட முதல் ஆனந்தக்கண்ணீர்.

பிணங்களுக்கு-கிடந்த திருக்கோலம் அல்ல-அமர்ந்த திருக்கோலம்தான் கள்ளிக்காட்டுக் கலாசாரம்.

ஒரு நாற்காலியில் நிமிர்ந்து உட்காரவைத்து, நாற்காலியின் கைகளில் பிணத்தின் கைகள் படியவைத்து, கால் கட்டைவிரல் இரண்டையும் இணைத்துக்கட்டி உயிருள்ள ஆள்போல் உட்காரவைத்து அலங்காரம் செய்வார்கள்.

கள்ளிக்காட்டில் பல பேருக்கு-சொல்லப் போனால்- எல்லோருக்கும் கல்யாணத்துக்குப் பிறகு நடக்கும் இரண்டாம் அலங்காரம் அதுதான்.

நெற்றியில் விபூதி-அதன்மேல் சந்தனம்-அதன் ஈரங்காய்ந்தும் காயாமலும் அதன்மேல் குங்குமம்-குங்குமத்தின் மேல் 'நெத்திக்காசு' வைப்பார்கள்.

பிணத்தின் தலைமாட்டில் ஊதுவத்தி கொளுத்தி வைப்பது மரபு. பிணத்தின் கெட்டவாடை வந்தவர்களுக்கு அடிக்கக்கூடாது என்பதுதான் அதன் ஐதீகம்.

ஆனால் அது பெரும்பாலும் விரட்டுவதெல்லாம்-குளித்த பிணத்தைவிடக் குளிக்காத பிணங்களின் கெட்டவாடையைத்தான்.

"சாம்பிராணி சூடம் கொண்டாங்கடி சாஸ்திரம் தெரியாத கழுதைகளா..."

பல பிணங்களைத் தூக்கிவிட்ட ஒரு கிழம், பெண்கள் மீது அதிகாரம் செலுத்தியது.

(வளரும்)



# தமது எதிர்கால செயற்பாடுகள் குறித்து ஐ.சி.ஆர்.சி அரசுடன் பேச்சுவார்த்தை

(கொழும்பு)

தமது எதிர்காலம் தொடர்பில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தலைநகர் கொழும்பில் இருந்து கொண்டு பணிகளை மேற்கொள்ளுமாறு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திற்கு அரசாங்கம் பணிப்புரை விடுத்துள்ளதாகவும் இது தொடர்பில் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா ஆகிய பிரதேசங்களில் இயங்கி வந்த கிளைகளை மூடிவிடுமாறு அரசாங்கம் கோரியுள்ளது.

தலைநகர் கொழும்பிலிருந்து பணிகளை மேற்கொள்ளுமாறு வெளிவிவகார அமைச்சு கோரிக்கை விடுத்துள்ளது.

இவ்வாறான ஒரு பின்னணியில் இலங்கையில் தொடர்ந்தும் தொண்டுப் பணிகளை மேற்கொள்வதா என்பது குறித்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் கவனம் செலுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தில் 31 வெளிநாட்டவர்கள் உள்ளிட்ட 318 பேர் கடமையாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களுக்கு மனிதாபினமான உதவிகளை வழங்குதல், யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளை வழங்குதல் போன்ற நடவடிக்கைகளை தற்போது மேற்கொண்டு வருவதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் அறிவித்துள்ளது. (ஸ்ரீ-2)

## இலங்கையில் வேற்றுக்கிரக வாசிகளின் நடமாட்டம்?

(கொழும்பு)

இலங்கையில் வேற்றுக் கிரகவாசிகளின் நடமாட்டம் காணப்பட்டதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

நேற்று முன்தினம் நாட்டின் பல பாகங்களிலும் அதிசயமான நிகழ்வுகள் நடைபெற்றுள்ளதாக அறியவருகிறது. வேற்றுக் கிரகவாசிகள் நாட்டுக்குள் பிரவேசித்துள்ளதாக பல பாகங்களில் தகவல்கள் வெளியானதாகவும் பறக்கும் தட்டுக்களை சிலர் நேரடியாகப் பார்த்ததாகவும் தகவல்களை வழங்கியுள்ளனர்.

பறக்கும் தட்டுக்கள் நாட்டின் பல பாகங்களிலும் தரையிறங்கியிருக்கலாம் என ஊகம் வெளியிட்டுள்ளதாகவும் பச்சைநிற உடலுடைய குள்ள மனிதர்கள் பறக்கும் தட்டிலிருந்து இறங்கியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

# படுவான்கரைப் பிரதேசத்தில் 3500க்கும் மேற்பட்ட வீடுகள் முற்றாக சேதம்

## அரியநேத்திரன் எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவான் கரைப்பகுதியில் அண்மையில் ஏற்பட்ட



வெள்ளப் பெருக்கினால் 3 ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட வீடுகள் முற்றாக சேதமடைந்துள்ளதாக தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளு மன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் இடம்பெற்ற பாரிய வெள்ள அனர்த்தம் காரணமாக படுவான்கரை பிரதேசமே மிகமோசமாக பாதிக்கப்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார்.

இதில் பட்டிப்பளை பிரதேசத்துக்குட்பட்ட பகுதிகளில் அதிகளவான வீடுகள் அழிவடைந்துள்ளதாகவும் சுமார் ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட வீடுகள் முற்றாக சேதமடைந்துள்ளதாக குறிப்பிட்டார்.

முற்றாக சேதமடைந்த வீடுகளில் அதிகமான வீடுகள் களிமண்ணால் கட்டப்பட்ட வீடுகள் என தெரிவித்த அவர் வெள்ளம் வடிந்த பின்னரும் பல இடங்களில் வீடுகள் இடிந்து விழுவதாகவும் வெள்ள நிலைமை ஓரளவு வடிந்துள்ள போதிலும் சில இடங்களில் இன்னும் வெள்ள நீர் வடியாததன் காரணமாக மக்கள் நலன்புரி முகாம்களிலேயே தங்கியுள்ளதாகவும் தெரிவித்தார்.

பண்டாரியன் வெளியில் 103 குடும்பங்களுக்கும் மகிழ வட்டவானில் 42 குடும்பங்களும் இவ்வாறு உள்ளதாகவும் ஏனைய பகுதிகளிலும் மக்கள் இன்னும் முகாம்களில் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அனே கமான பாடசாலை நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் முகாம்களில் உள்ளோர் பல நோக்கு மண்டபங்களிலும் தற்காலிக கொட்டகைகளிலும் உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

## மணவாளக்கோல உற்சவம்

(யாழ்ப்பாணம்)

பொலிகண்டி இருப்பை மூலை சித்தி விநாயகர் ஆலயத்தில் இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு விநாயகர் பெருமானுக்கு 1008 சங்குகள் வைத்து சங்காபிஷேகமும் சுப்ரமணியப் பெருமானுக்கு 109 சங்குகள் வைத்து சங்காபிஷேகமும் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் மாலை 6 மணிக்கு விசேட பூஜை இடம் பெற்று திருக்கல்யாண வைபவமும் நடைபெற்று தொடர்ந்து சுவாமி வீதியுலா வரும் நிகழ்வும் இடம்பெறும். (ஸ்ரீ-9-48)

## சீனப்பிரஜைகள் இருவர் விமான நிலையத்தில் கைது

90 இலட்சம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு நாணயங்களை கடத்த முயற்சித்த சீனப்பிரஜைகள் இருவரை பண்டார நாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் சுங்க அதிகாரிகள் நேற்று கைது செய்துள்ளனர்.

இச்சந்தேக நபர்கள் இருவரை ஹொங்ஹொங் செல்லும் விமானத்தின் மூலம் சீனாவுக்குச் செல்லவிருந்ததாக சுங்கப்பணிப்பாளர் பராக்கிரம பஸ்நாயக்க தெரிவித்தார்.

பயணப்பொதிகளுக்குள் அமெரிக்க டொலர் , சீன யுவான் மற்றும் ஏனைய நாடுகளின் நாணயங்கள், பணம் மறைத்து வைக்கப் பட்டிருந்ததாகவும் அவற்றின் பெறுமதி 9 மில்லியன் ரூபா எனவும் தெரிவிக் கப்படுகிறது. இது தொடர்பாக பண்டார நாயக்க விமான நிலையத்திலுள்ள சுங்க அதிகாரிகள் மேலதிக விசாரணைகளை நடத்திவருகின்றனர். (ஸ்ரீ-2)


### அறிவித்தல்
### யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில்

வழ.இல.13/2010. தத்துவம்.

காலஞ்சென்ற மகாதேவன் தனபூபதி யின் மரணச் சொத்து சம்பந்தமாக குடியியல் நடைமுறைச் சட்டக் கோவையின் பிரிவு 528 இன் கீழான விண்ணப்பம்

சைமன் மகாதேவா என அழைக்கப்படும் மகாதேவன்,
கலைவாணி வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

-மனுதார்

எதிர்:-
(1) மகாதேவன் தனராஜ்
(2) மகாதேவன் தர்மினி
இருவரும் கலைவாணி வீதி,
கோண்டாவில் வடக்கு, கோண்டாவில்.
(3) பத்மநாதன் கமலநாதனும்
(4) பெண் தயாழினி கமலநாதனும்
துன்னாலை வடக்கு, கரவெட்டி.

- எதிர்மனுதார்கள்

இத்தாற் சகலருமறிக, மேலே பெயர் குறிப்பிட்ட மனுதாரராகிய சைமன் மகாதேவா என அழைக்கப்படும் மகாதேவன் இம்மன்றில் மனு, சத்தியக்கூற்று மற்றும் ஆவணங்கள் சமர்ப்பித்து காலஞ்சென்ற மகாதேவன் தனபூபதியின் மரணச் சொத்துக்களை நிர்வகிப்பதற்கு தனக்கு நிர்வாகத்தத்துவப்பத்திரம் வழங்குமாறு விண்ணப்பித்துள்ளார்.

எனவே காலஞ்சென்ற மகாதேவன் தனபூபதியின் மரணச்சொத்துக்களை நிர்வகிப்பதற்கு மனுதாரருக்கு நிர்வாகத்தத்துவப்பத்திரம் வழங்குவதற்கு ஆட்சேபனை தெரிவிக்க விரும்பும் எவரும் தமது ஆட்சேபனைகளை 2011 ஆம் ஆண்டு மாசி மாதம் 14 ஆம் திகதி இம்மன்றில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்
2011 ஆம் ஆண்டு தை மாதம் 18 ஆம் திகதி.

வரைபு
மனுதார்சட்டத்தரணி

(3538)

மன்றின் கட்டளைப்படி
பதிவாளர்.



ஓம் சக்தி



மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி பீடம்
மன்றம் - கிளானை அல்வாய்
தைப் பூசத்திருவிழா
20.01.2011 வியாழக்கிழமை

நிகழ்வுகள்

காலை 7.00 மணி - 9.00 மணிவரை
பக்தர்கள் அன்னைக்கு பாலாபிஷேகம்
தொடர்ந்து யாகம், பூஜை
மக்கள் அபிஷேக, அன்னதானப் பொருட்கள்
கொடுத்து ஊழ் வினையை நீக்கலாம்.
போலிகளுக்கு இங்கே இடமில்லை.

வழி- நெல்லியடி
திக்கம் வடிசாலை
கிழக்கே 300 மீற்றர்
தொலைபேசி :- 0217901177

(சி-2196)

இங்ஙனம்
அம்மா நிர்வாகம்.




பூநகரி பரந்தன் வீதியில் எட்டாவது மைல் தூரத்தில் அமைந்துள்ள குடமுறுட்டி பாலத்தின் புனர் நிர்மாணப்பணிகள் பூர்த்தியாகும் நிலையில் உள்ளதை படத்தில் காணலாம்.

# ஈழத்தில் தமிழில் வெளிவரும் கலை இலக்கியச் சிற்றிதழ்கள்

3

இன்று மல்லிகை, ஞானம், ஜீவநதி, செங்கதிர் போன்ற சஞ்சிகைகள் நின்று நிலைப்பதற்குக் காரணம் முறையே, அவற்றின் ஆசிரியர்களான டொமினிக் ஜீவா, தி.ஞானசேகரன், க.பரணீதரன், செங்கதிரோன் ஆகியோர் தம்மை அர்ப் பணித்துச் செயற்பட்டு வருதலேயாகும்.

அதேவேளை, உண்மையான, விசுவாசமான, உழைப்பும் சவால்களைச் சமாளிக்கும் திறனும் வாசகர்களையும் ஆதரவாளர்களையும் படைப்பாளிகளையும் அரவணைத்துச் செல்லும் பண்புமே, இச்சஞ்சிகைகள் தனியார் முயற்சிகளி னூடாக வெளிவந்து கொண்டிருக்கின்ற நிலையிலும், வாசகர்களிடமிருந்தும் படைப்பாளிகளிடமிருந்தும் பரந்த அளவில் ஆதரவைப் பெற்றுத் தந்துள்ளன. அத்தோடு, இந்த ஒத்துழைப்பின் காரணமாகவே மல்லிகை, ஞானம், ஜீவநதி ஆகிய சஞ்சிகைகள் பதிப்பு முயற்சிகளையும் இன்று மேற்கொள்ள முடிகின்றது.

நிறுவன ரீதியாகவோ அல்லது கூட்டுமுயற்சியிலோ வெளிவரும் சஞ்சிகைகளில் குறிப்பிட்ட சில எழுத்தாளர்களின் படைப்புகளே இடம்பெறுவதனால், இக்குழுநிலையை விரும்பாத படைப்பாளிகள் இச்சஞ்சிகைகளை நாடுவதில்லை.

**வளமாக்குவதற்கான எதிர்காலத் திட்டங்கள்**

ஈழத்துத் தமிழ்க் கலை இலக்கிய சஞ்

**கொழும்பில் நடைபெற்ற சர்வதேச எழுத்தாளர் மாநாட்டில் வாசிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை**

சிகைகளின் முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கி அவற்றை வளப்படுத்துவதற்கான திட்டங்களாக பின்வருவன முன்வைக்கப் படுகின்றன.

◆ சில நியமங்களை வகுத்து, கலை இலக்கிய சிற்றிதழ்களுக்கு அரசு மானியம் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

◆ வாசிப்பின் முக்கியத்துவத்தை உணர்த்தி, கலை இலக்கிய சிற்றிதழ்களினூடாகப் பெற்றுக் கொள்ளக்கூடிய அனுகூலங்களைப்பற்றி பரப்புரை செய்தல் வேண்டும்.

◆ "இதழியற் கல்வி" என்ற பாடத்தை பாடசாலைக் கலைத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளவேண்டும்.

◆ பிரதேசம்தோறும் வாசகர் வட்டங்களை உருவாக்கி, கலை இலக்கிய சிற்றிதழ்களில் வெளிவரும் விடயதானங்கள் குறித்து கருத்தாடற் வளங்களை உருவாக்குதல் வேண்டும்.

◆ புதிய இளந்தலைமுறைப் படைப்பாளிகளுக்கு படைப்பு உத்திகள், செவ்வி தாக்கம் போன்ற தலைப்புகளில் பயிற்சிப் பட்டறைகளை ஒழுங்கு செய்து, பயிற்சி வழங்கவேண்டும்.


◆ நாடு தழுவிய ரீதியிலும், பிரதேசரீதியிலும் கலை இலக்கிய ஆய்வு அமர்வுகளை ஒழுங்கு செய்து ஆய்வுகளை ஊக்குவிக்க வேண்டும்.

◆ தமிழ்ச் சிற்றிதழ்களின் ஒழுங்கான வரவின்மைக்கான காரணங்களை அறிந்து கொள்வதற்கான ஆய்வுகளை ஊக்குவிக்கவேண்டும்.

◆ இதழியல் தொடர்பான போட்டிகளை நாடுதழுவியரீதியில் ஒழுங்குசெய்ய வேண்டும்.

**நிறைவுரை**

நாம் இது வரை நோக்கிய வற்றைச் சுருக்கிக் கூறுவதாயின், ஈழத்தில் தமிழில் கலை இலக்கியச் சிற்றிதழ்கள் நீண்ட வரலாற்றுப் பாரம்பரியம் கொண்டவை. அதிக எண்ணிக்கையான இச்சிற்றிதழ்கள் ஈழத்துத் தமிழ் கலை இலக்கிய வளர்ச்சியில் கணிசமான பங்களிப்புச் செய்துள்ளன. சிற்றிதழ்களுக்கான சவால்களுக்கு மத்தியில் பல இதழ்கள் நின்று நிலைக்க முடியாமற் போயின. ஆயினும் இன்றும் பல இதழ்கள் வெளி வந்துகொண்டிருக்கின்றன. இவை கால ஓட்டத்தில் இலக்கியச் செல்நெறியைத் தீர் மானிப்பனவாய், இன்றைய ஈழத்துத் தமிழ் கலை இலக்கிய வளர்ச்சிக்குத் தம்மாலான அர்ப்பணிப்பை வழங்கி வருகின்றன.



**க.பரணீதரன்**
**ஆசிரியர் -ஜீவநதி**

இவற்றின் வளர்ச்சிக்கு வேண்டிய திட்டங்களை முன்னெடுக்கவேண்டியது காலத்தின் தேவையாகும். (முற்றும்)

# உள்ளூராட்சி தேர்தலில் பெண்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்

## மத்திய மாகாண பெண்கள் பேரவை கோரிக்கை

(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத்தேர்தலில் பெண்களுக்குரிய முன்னுரிமை வழங்கப்பட வேண்டுமென மத்திய மாகாண பெண்கள் பேரவை கோரிக்கை விடுத்துள்ளது. உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் பெண்களுக்கு குறைந்த பட்சம் 25 வீதமேனும் இட ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

பெண்களுக்குரிய இட ஒதுக்கீடு செய்யப்படாவிட்டால் தேர்தலில் பெண்கள் வாக்களிக்கக்கூடாது எனக் குறித்த அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

மத்திய மாகாணத்தில் உள்ளூராட்சி மன்றத்தேர்தலில் போட்டியிட உத்தேசித்துள்ள பல பெண் வேட்பாளர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்ட போதிலும் உரிய சந்தர்ப்பம் வழங்கப்படுமா என்பதில் சந்தேகம் நிலவி வருவதாக பெண்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

வேட்புமனுத்தாக்கல் செய்யும் போது சகல கட்சிகளும் 25 வீதம் பெண்களுக்கு இட ஒதுக்கீடு வழங்க வேண்டுமென மத்திய மாகாண மகளிர் பேரவை கோரிக்கை விடுத்துள்ளது. (ஸ்ரீ-2)

# ஆரையம்பதி பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் பணிப்பகிஷ்கரிப்பு

(கொழும்பு)

ஆரையம்பதி பிரதேச செயலாளரை தாக்கியவர்களை கைது செய்யக்கோரி நேற்று செவ்வாய்க்கிழமை முதல் ஆரையம்பதி பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

உத்தியோகஸ்தர்களின் பணிப்பகிஷ்கரிப்பால் ஆரையம்பதி பிரதேச செயலகத்தில் கடமைகள் ஸ்தம்பிதமடைந்துள்ளதுடன் பிரதேச செயலக பிரிவிலுள்ள சமுர்த்தி வங்கிகளும் மூடப்பட்டுள்ளன.

பிரதேச செயலகத்தைச் சுற்றி பொலிஸார் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டுள்ளனர். (ஸ்ரீ)

# சுவிற்ஸர்லாந்தில் புகலிடம் கோரியோர் வரிசையில் இலங்கையருக்கு மூன்றாமிடம்

(கொழும்பு)

சுவிற்ஸர்லாந்தில் கடந்த வருடம் அரசியல் தஞ்சம் கோரியுள்ளோர் வரிசையில் இலங்கையர்கள் மூன்றாம் இடத்தில் உள்ளனர்.

. 939 அரசியல் தஞ்சக் கோரிக்கைகள் இலங்கையர்களிடம் இருந்து விடுக்கப்பட்டு இருக்கின்றன.

கடந்த 2009ஆம் ஆண்டு இலங்கையர்களிடம் இருந்து விடுக்கப்பட்ட அரசியல் தஞ்சக் கோரிக்கைகளைக் காட்டிலும் கடந்த வருடம் விடுக்கப்பட்ட கோரிக்கைகள் சொற்பமானவை எனவும் இவ்வீழ்ச்சிக்கு இலங்கையின் உள்நாட்டு யுத்தம் முடிவுக்கு வந்து விட்டமையே காரணம் என்று நம்பப்படுகின்றது.

பல நாடுகளில் இருந்தும் ஒட்டுமொத்தமாக கடந்த வருடம் 15 ஆயிரத்து 567 பேர் சுவிற்சலாந்தில் புகலிடம் கோரியிருக்கின்றனர். விண்ணப்பித்தோரில் அதிகமானோர் நைஜீரியர்கள். அடுத்த நிலையில் எரித்திரியர்கள் உள்ளனர். (ஸ்ரீ-2)

# ஜனாதிபதியின் கருத்துக்களுக்கு இந்திய கடற்படையினர் மறுப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் கருத்துக்களுக்கு இந்திய கடற்படையினர் மறுப்பு வெளியிட்டுள்ளனர்.

இலங்கைக் கடற்படையினர் தாக்குதல்களிலேயே தமிழக மீனவர் கொல்லப்பட்டதாக வெளியான தகவல்களில் உண்மையில்லை என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அறிவித்திருந்தார். எனினும் இந்தக் கருத்துக்களை நிராகரிப்பதாக இந்திய கடற்படையினர் அறிவித்துள்ளனர்.

தமிழக மீனவர் பாண்டியன் இலங்கைக் கடற்படையினர் நடத்திய தாக்குதலில் கொல்லப்பட்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதல் சம்பவம் குறித்த அறிக்கைகளை இந்திய கடற்படையினர் டில்லிக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

(ஸ்ரீ-2)

# மட்டு.வாகரையில் 11 பேர் ஆயுதங்களுடன் கைது

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரை கிரிமிச்சை பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல்களின் போது 14 துப்பாக்கிகள் மீட்கப்பட்டுள்ளதுடன் 11 பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்புத் தேடுதல்களின் போதே ஆயுதங்களுடன் இவர்களை சந்தேகத்தின் பேரில் கைது செய்ததாக வாகரை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்ட நபர்களை நேற்றைய தினம் வாழைச்சேனை நீதிமன்றில் ஆஜர் படுத்தியதாகவும் மேலதிக விசாரணைகளை வாகரை பொலிஸார் தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றனர். (ஸ்ரீ-2)

# பாகிஸ்தான் இராணுவத்தளபதி இன்று இலங்கை விஜயம்

பாகிஸ்தானின் இராணுவத் தளபதி ஜெனரல் அஷ்ரப் கயானி மூன்று நாள் விஜயமொன்றை மேற்கொண்டு இன்று இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இலங்கை வரும் இவர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ,முப்படைத்தளபதிகள் உள்ளிட்ட முக்கியஸ்தர்களை சந்தித்து பேச்சு வார்த்தை நடத்தவுள்ளார். அத்துடன் சபுகஸ்கந்த இராணுவப் பயிற்சி முகாமில் பாகிஸ்தான் இராணுவத் தளபதி விசேட உரையொன்றை ஆற்றவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

# தை மாத இராசி பலன்கள்



## மிதுனம்

(மிருகசீரிடம் 3, 4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்)

*நினைத்ததை நினைத்த நேரத்தில் முடிக்க வேண்டும் என்று சொல்லும் மிதுன இராசி நேயர்களே!*

நீங்கள் நாகரிகம் தெரிந்த நல்ல மனிதர்கள், சிறுவயது முதல் யாருடன் பழகினாலும், அவர்களின் குணம் உங்களோடு ஒட்டிக் கொள்ளும். நல்ல குறிக்கோளுடன் வாழ வேண்டுமென்று சொல்வீர்கள். எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருக்க என்ன வழியென்று யோசிப்பீர்கள். எந்தத் தொழிலைச் செய்தாலும் அதில் கூடுதல் கவனம் செலுத்துவது தான் உங்கள் வெற்றிக்குக் காரணம்.

தைமாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்திலேயே ஜென்மத்தில் கேதுவும், ஏழில் இராகுவும் சஞ்சரிக்கிறார்கள்.

எனவே, சர்ப்ப தோஷத்தின் பிடியில் சிக்கியிருக்கிறது. வளர்ச்சி ஒருபுறம் வந்தாலும், வந்த மறு நிமிடமே தளர்ச்சியும் உருவாகலாம். முறையாக சர்ப்ப சாந்தியைச் செய்வது உங்கள் முன்னேற்றத்திற்கு வித்திடும்.

தனாதிபதி இலாப ஸ்தானத்தில் சஞ்சரித்து மாதம் தொடங்குவதால், தனலாபத்திற்கு குறைவிருக்காது. பத்தாமிடத்து குருவால் பதவிமாற்றம், இடமாற்றம் ஏற்படுவதோடு, வேலையில் இருப்பவர்கள் வி.ஆர்.எஸ். பெற்றுக் கொண்டு, வெளியூருக்குச் செல்லலாமா? என்ற சிந்தனை ஒருசிலருக்கு உருவாகலாம். நல்ல முடிவெடுக்க நினைப்பவர்கள் சுயஜாதகத்தைப் பார்த்துக் கொள்வது நல்லது. நேரம் சாதகமாக இருந்தால், சாதகமான பலன் கிடைக்கும்.

அர்த்தாஷ்டமச் சனியின் ஆதிக்கத்தால் சொந்தம், சுற்றங்களில் பகை உருவாகலாம். எனவே, விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. *விட்டுக் கொடுப்பவர் கெட்டுப் போவதில்லை கெட்டுப் போகிறவர் விட்டுக் கொடுப்பதில்லை* என்ற பழமொழியை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டிய நேரமிது.

இம்மாதம் 26 ஆம் திகதி மகர இராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். இராசிநாதன் புதன் எட்டில் மறைந்தாலும், மறைந்த புதனால் நிறைந்த தனலாபம் கிடைக்கும் என்ற முன்னோர் வாக்கிற்கு ஏற்ப, வருமானம் இருமடங்காகலாம்.

ஆனால், ஆரோக்கியத்தில் மட்டும் அக்கறை செலுத்த வேண்டிய சூழ்நிலை ஏற்படலாம். எனவே, நோய்க்கான அறிகுறி தெரியும் பொழுதே, மருத்துவ ஆலோசனைகளைப் பெறுவது நல்லது.

5, 12 இற்கு அதிபதியான சுக்ரன் ஜனவரி 30ஆம் திகதி தனுசு இராசியில் சஞ்சரிக்கப் போகிறார். பொதுவாக, விரயஸ்தானாதிபதியாகவும், சமாதிபதியாகவும் விளங்கும் ஒரு கிரகம் இராசியைப் பார்க்கும்பொழுது, பிள்ளைகள் வழியில் பெரும் செலவு ஏற்படலாம். எனவே, அதற்குரிய தேவைகளை பூர்த்தி செய்யுங்கள்.

பெப்ரவரி 12ஆம் திகதி கும்பத்தில் புதன் சஞ்சரிக்கப் போவதால், தந்தை வழியில் எதிர்பாராத ஒத்துழைப்புக் கிடைக்கும். பூர்வீக சொத்துக்களிலுள்ள பிரச்சினை அகலும். இக் காலத்தில் சனி வக்ரம் பெறுவது ஓரளவுக்கு நன்மைதான்.

ஆரோக்கியத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். பக்கத்து வீட்டாருடன் ஏற்பட்ட பகை மாறும். சிக்கல் கொடுத்தவர்கள் சிரம் தாழ்த்தி வணங்கிடுவர். பக்கபலமாக இருக்கும் நண்பர்களில் பலரும் உங்களுக்கு ஒத்துழைப்புச் செய்ய முன்வருவர்.

இம்மாதம் சப்தம இராகுவால் சஞ்சலங்கள் ஏற்படாமல் இருக்க மாரியம்மனை வழிபட்டு வாருங்கள்.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்**

இம்மாதம் உடன்பிறப்புகளை அனுசரித்துச் செல்வது நல்லது. ஒவ்வொரு நாளும் பணப்புழக்கம் அதிகரித்தாலும், நிம்மதி குறைந்து கொண்டே இருக்கும். எனவே, குலதெய்வ வழிபாட்டிலும், கொடுக்கும் தெய்வம் எதுவோ அதையும் வழிபட்டு வந்தால், தடுக்கும் சக்திகள் தகர்த்தெறியப்படும்.

தன்னுடன் இருப்பவர்களின் பகையும் மாறும். மாதக்கடைசியில் விஷஜந்துக்களால் பயம் உருவாகலாம். வீடு வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். கணவரின் அன்புக்கு பாத்திரமாக கைகொடுத்து உதவுவது உங்களின் விட்டுக் கொடுக்கும் தன்மையாகும்.



## கடகம்

(புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம் )

*சுறுசுறுப்பை மூலதனமாக்கி சொல்லை செயலாக்கி காட்டும் கடக ராசி நேயர்களே!*

வாழ்க்கையில் சம்பந்தமில்லாத பிரச்சினைகளுக்காக கவலைப்படுபவர்கள் நீங்கள். உற்றார், உறவினர்களை நம்புவதைக் காட்டிலும், மற்றவர்களை அதிகம் நம்புவீர்கள். குறுக்கு விசாரணை செய்வதில் உங்களுக்கு நிகர் யாரும் இல்லை. எவ்வளவு தைரியமாக இருந்தாலும், அடிமனதில் உங்களுக்கு சிறு பயம் இருந்துகொண்டே இருக்கும். சூழ்நிலைக்கு ஏற்ப பேச்சை மாற்றிப் பேசுபவர்களும் நீங்கள்தான்.

இம்மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, இராசிநாதன் சந்திரன் தொழில் ஸ்தானத்தில் சஞ்சரித்து மாதம் தொடங்குவதால், தொழில் வளர்ச்சி சிறப்பாகவே இருக்கும்.

தனாதிபதி சூரியனும், யோகாதிபதி செவ்வாயும்இணைந்து உங்கள் இராசியைப் பார்ப்பதால், எல்லா வழிகளிலும் நன்மை ஏற்படும் மாதமாகவே இம்மாதத்தைக் கருதலாம். வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள்.

குருவின் பார்வையும் உங்கள் இராசியில் பதிவதால், குழப்பங்கள் அகலும். குடியிருக்கும் வீட்டால் ஏற்பட்ட பிரச்சினையும் மாறும். அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வீர்கள். அர்த்தாஷ்டமச் சனி வருவதற்கு முன்னதாகவே, ஒரு சில நல்ல காரியங்களையும் சனி செய்து கொடுக்கும். பார்க்கும் குருவை பலப்படுத்த வியாழன் தோறும் குரு வழிபாட்டை மேற்கொள்வது நல்லது.

சுயஜாதகத்தில் குரு திசை அல்லது குரு புத்தி நடப்பவர்கள் அதற்குரிய சிறப்பு வழிபாடுகளை மேற்கொண்டால், மேலும் நற்பலன்களைப் பெறமுடியும்.

இம்மாதம் 26ஆம் திகதி மகர இராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். இதன்விளைவாக, உடன் பிறப்புகள் வழியில் இதுவரை கிடைக்காத ஒத்துழைப்புகள் இப்பொழுது கிடைக்கும், திடீர் பயணங்கள் தித்திக்க வைக்கும். குலதெய்வ வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள். கொடுக்கல்–வாங்கல்களில் முன்னேற்றம் ஏற்படும். அடுத்தவர் நலன் கருதி எடுத்த முயற்சிகளிலும் ஆதாயம் அதிகரிக்கும்.

11இற்கு அதிபதியான சுக்ரன் 6இல் வரும்பொழுது, எதிர்பார்த்த அரசு வழிச்சலுகைகள் வந்து சேரும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு ஊதிய உயர்வு, உத்தியோக உயர்வு போன்றவைகள் தானாகவே வந்து சேரும்.

செய்தொழில் சிறப்பாக நடைபெற வங்கிகளில் கடனை எதிர்பார்த்துக் காத்திருக்கும் முதலீட்டாளர்களுக்கு தானாகவே, மேலாளர்கள் வந்து நல்ல தகவல்களைச் சொல்வார்கள். இதுபோன்ற நிகழ்வு இம்மாத 30 ஆம் திகதிக்கு மேல் நடைபெறவுள்ளது.

பெப்ரவரி 12ஆம் திகதி கும்பத்தில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். அதேநேரத்தில், சனியும் வக்ர இயக்கத்தில் இருக்கிறார்.

எனவே, விபரீத இராஜயோகம் செயற்படப் போகிறது. திட்டமிடாது செய்யும் காரியங்களில் வெற்றி காண்பீர்கள். ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும். திடீர் இடமாற்றம், ஊர்மாற்றங்கள் ஒருசிலருக்கு ஏற்படலாம்.

இம்மாதம் வக்ரசனியின் ஆதிக்கத்தால் வளர்ச்சியில் எந்தப் பாதிப்பும் ஏற்படாமல் இருக்க, சனிக்கிழமை தோறும் ஆனைமுகப் பெருமான் வழிபாட்டையும், சனீஸ்வர பகவான் வழிபாட்டையும் மேற்கொள்வது நல்லது.

**சிவல்புரி சிங்காரம்**

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்**

இம்மாதம் குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும் மாதமாக அமையும். பயணங்களால் பலன் கிடைக்கும். விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து சேருவர்.

வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும். விலை உயர்ந்த பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

சுக்ர பெயர்ச்சிக்கு பின்னர், உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு எதிர்பாராத விதத்தில் ஊதிய உயர்வுகள் ஏற்படலாம். வழிபாடுகளில் கவனம் செலுத்தினால், வளர்ச்சியை மேலும் கூட்டிக் கொள்ளலாம்.

(தொடரும்)

# அரச பணியாளர்களின் விடுமுறைகள் இரத்து

எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தல்கள் நிறைவடையும் வரையில் சகல அரச பணியாளர்களினதும் விடுமுறைகளையும் இரத்துச் செய்யுமாறு தேர்தல்கள் செயலகம் சுற்று நிருபம் ஒன்றை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் தேர்தல்கள் ஆணையாளரால் அனைத்து அரசாங்க திணைக்களங்கள், சபைகள் மற்றும் நிறுவனங்களின் பிரதானிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் செயலகத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இந்தக் காலப்பகுதியில் அரச பணியாளர்களுக்கு பதவி உயர்வு மற்றும் இடமாற்றங்களும் வழங்கப்படக்கூடாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

அரச பணியாளர்கள் வெளிநாடுகளுக்கு செல்வார்களாயின் அவர்கள் அதற்கு நியாயமான காரணங்களை முன்வைக்க வேண்டும் என தேர்தல் ஆணையாளரின் சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ–2)

# இந்திய அரசினால் இரண்டாம் கட்ட நிவாரண பொருட்கள் அனுப்பிவைப்பு


வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான தமது இரண்டாம் கட்ட நிவாரணப் பொருட்களை இந்திய அரசாங்கம் நேற்று முன்தினம் அனுப்பியுள்ளது.

இந்திய விமானப் படைக்குச் சொந்தமான ஐஎல் 76 என் ஊடாக 21 தொன்கள் எடைகொண்ட நிவாரணப் பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பி.ரி.ஐ செய்தி வெளியிட்டுள்ளது.

சீனி, பால்மா உள்ளிட்ட உணவுப் பொருட்களுடன் 20 ஆயிரம் தண்ணீர் போத்தல்கள் மற்றும் ஆயிரம் மெத்தைகள் என்பன இந்த நிவாரணத் தொகுதியில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

ஏற்கனவே கடந்த 14 ஆம் திகதி இந்திய அரசாங்கம் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான தமது முதலாம் கட்ட நிவாரணப் பொருட்களை அனுப்பி வைத்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ–2)





யாழ்ப்பாணம் சத்திரம் ஞானவைரவர் தேவஸ்தானத்தில் பட்டிப்பொங்கல் கோமாதா உற்சவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை பசுக்கள் இடபங்களை பாதுகாக்கும் அமைப்பின் அனுசரணையுடன் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பசுக்கள் ஊர்வலமாக அழைத்து வரப்படுவதையும் இவ் உற்சவத்தில் கலந்து கொண்ட அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா, யாழ். மாநகர மேயர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, லயன் கழகங்களின் மாவட்ட ஆளுநர் எஸ். ஜெயவத்சலன் ஆகியோரையும் படங்களில் காணலாம்.

# நெல் வயல்களில் கட்டடங்கள் அமைப்பதற்கு அரசாங்கம் தடை

விவசாய நிலங்களில் குறிப்பாக நெல் வயல்களில் கட்டடங்களை நிர்மாணம் செய்வதற்கு அரசாங்கம் தடை விதித்துள்ளது.

நெல் வயல்களை வேறு தேவைகளுக்காகப் பயன்படுத்துவோருக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என அரசாங்கத் தகவல் திணைக்களம் நேற்று முன்தினம் அறிவித்துள்ளது.

நெல் வயல்களை பயன்படுத்துதல் குறித்து நாட்டில் காணப்படும் சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. நெல் வயல்களை வேறு தேவைகளுக்குப் பயன்படுத்துவோருக்கு எதிராக ஒரு இலட்சம் ரூபா அபராதமோ அல்லது ஆறு மாத கால சிறைத்தண்டனையோ விதிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சில வேளைகளில் இந்த இரண்டு தண்டனைகளும் விதிக்கப்படக் கூடுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. நெல் வயல்களில் கட்டடங்களை அமைத்த 470 பேருக்கு எதிராக தற்போது நடைமுறையில் உள்ள சட்டத்தின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. (ஸ்ரீ-2)

# திருவாசக முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் மேற்கு ஸ்ரீ பார்வதி அம்பாள் ஆதீன அருள்மிகு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் சமேத ஸ்ரீ ஆதிபதீஸ்வரர் கோயில் மாதாந்த பூரணை தினத்தில் நடைபெறும் திருவாசக முற்றோதல் நிகழ்வு இன்று புதன்கிழமை காலை 8 மணிக்கு ஆலய அறங்காவலர் சபையின் அனுசரணையுடன் மன்றத் தலைவர் பண்டிதர் வ.பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் அகத்தியர் தேவாரத்திரட்டு முற்றோதல் , பன்னிரு திருமுறைப்பாராயணம் என்பன நடைபெறும். (ஸ்ரீ-9)

# நாடும் நடப்பும்

## தமிழன் கருநெலம்

நாடும் நல்லிணக்கம் நாட விடார்
தரவு நிறுவல் தேற்றம் தந்து
தாயகம் இது தமிழன் வாழ்ந்ததென்று கூறும் படி
வீறுகொண்டு கூறு கொள்வார் நயந்துரைப்பர்
சட்டென வெட்டி வெட்டென விட்ட
புனிதமெனும் அனுபந்தம் காண்
அநுராத புரஅகழ் வாய்வில்
பத்தடி வெட்டி பௌத்த வடிகண்டதனால்
மறுவடி தொடர கரும்பொன்னும் கருங்கல்லும்
தமிழன் கருவூலம் துருப்பிடித்த விதை
திராவிடமே முன்திரண்டு புரண்டு உருண்டவிடம்
பொழிந்தனன் செந்நா செய்தித் தாளதனில்
சிதைத்தனர் பேராசிரியன் அகமெனும்
மனத்தையும் இல்லிடத்தையும்
அவரின் கதி இது வென்றால் எமது கதி.

அறியாதவன்

# பாதிக்கப்பட்ட ஊழியர்களுக்கு விசேட விடுமுறை உறுதிப்படுத்தப்பட வேண்டும்

## அகில இலங்கை தொழிற்சங்க சம்மேளனம் தெரிவிப்பு

(கொழும்பு)

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அரசாங்க ஊழியர்களுக்கு விசேட விடுமுறை வழங்கப்படுவதுடன் ஒருமாத சம்பளத்தை வட்டியில்லாக் கடனாக வழங்குமாறு அரசாங்கத்திடம் அகில இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனம் நேற்று முன்தினம் கோரிக்கை விடுத்துள்ளது.

வடக்கு, வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு விசேட விடுமுறை வழங்கப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ள போதிலும் அது ஒரு சுற்றுநிருபமாக வெளியிடப்படவில்லை என அகில இலங்கை தொழிற்சங்க சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் சுமந்த கோரள ஆராச்சி தெரிவித்தார்.

விடுமுறை வழங்குவது மாத்திரம் போதுமானதல்ல. அவர்களின் வாழ்க்கையை மீளக் கட்டியெழுப்புவதற்கான உதவிகள் வழங்கப்பட வேண்டும். அரசாங்க ஊழியர்கள் இதற்குமுன்னர் இவ்வாறான பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளனர்.

ஊழியர்களின் விடுமுறையை அங்கீகரிப்பதற்கு முன்னர் தமது வீடு பாதிக்கப்பட்டிருப்பதை நிரூபிக்குமாறு வலியுறுத்தப்படுகின்றனர். அதனால்தான் நாம் ஒரு சுற்று நிருபத்தின் மூலம் விடுமுறையை உறுதிப்படுத்துமாறு நாம் கோருகிறோம் என அவர் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# அறிவித்தல்

## யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்

வழ.இல.தத்துவம் 12/2010

காலஞ்சென்ற தம்பையா சிவராசாவின் மரணசாதனமில்லாத மரணச் சொத்துக்களின் விடயத்தில் சிவராசா கைம்பெண் மனோரமா தற்போது 249, காமராஜபுரம், நுங்கம்பாக்கம், சென்னை 600034, தமிழ்நாடு, இந்தியா. தனது அற்றோணித் தத்துவக்காரர் தம்பையா சர்வானந்தன் மூலம் தோற்றம் 221/1, கஸ்தூரியார் றோட் ,யாழ்ப்பாணம்.

மனுதார்

எதிர்

சிவராசா சிவரூபன்
தற்போது 249, காமராஜபுரம், நுங்கம்பாக்கம், சென்னை 600034, தமிழ்நாடு, இந்தியா.
தனது அற்றோணித் தத்துவக்காரர் சுஜிதா சர்வானந்தன் மூலம் தோற்றம் 221/1, கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம்.

எதிர்மனுதார்.

மேற்படி மனுதார் மேற்படி காலஞ்சென்றவருடைய மரணச்சொத்துக்கள் தொடர்பில் அதை நிர்வகிப்பதற்கும் நிர்வாகத் தத்துவப்பத்திரம் பெறுவதற்கும் இந்நீதிமன்றத்தில் விண்ணப்பித்துள்ளாராதலினால் இதில் அக்கறையுள்ள எவரேனும் 2011 ஆம் ஆண்டு மாசி மாதம் 23ஆம் திகதி காலை 9.00 மணிக்கு இம்மன்றில் தோன்றி தெரிவிக்குமாறு இதனால் அறிவித்தல் தரப்படுகின்றது.

2010ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 24 ஆம் திகதி

வரைபு
மனுதாரின் சட்டத்தரணி

மன்றின் கட்டளைப்படி
பதிவாளர்

(3526)




★1788 - இங்கிலாந்தில் இருந்து கைதிகளை ஏற்றி வந்த இரண்டாவது தொகுதி கப்பல்கள் நியூ சவுத் வேல்ஸின் பொட்டனி பே பகுதியை வந்தடைந்தது.

★1806 - நன்னம்பிக்கை முனையை பிரித்தானியா பிடித்தது.

★1839 - பிரித்தானிய கிழக்கிந்தியக் கம்பனி யேமனின் ஏடன் நகரைக் கைப்பற்றியது.

★1899 - ஆங்கிலோ-எகிப்திய சூடான் அமைக்கப்பட்டது.

★1903 - ஐக்கிய அமெரிக்காவுக்கும் இங்கிலாந்துக்கும் இடையே முதலாவது வானொலி ஒலிபரப்பு ஆரம்பமாயிற்று.

★1917 - லண்டனில் ஆயுதக் களஞ்சியம் ஒன்றில் இடம்பெற்ற வெடிவிபத்தில் 73 பேர் கொல்லப்பட்டும் 400 பேர் காயமும் அடைந்தனர்.

★1927 - பிரித்தானியா சீனாவுக்கு படைகளை அனுப்பியது.

★1941 - இரண்டாம் உலகப் போர்: பிரித்தானியப் படைகள் இத்தாலி வசமிருந்த எரித்திரியாவைத் தாக்கினர்.

★1942 - இரண்டாம் உலகப் போர்: ஜப்பானியப் படைகள் பர்மாவை முற்று கையிட்டனர்.

★1966 - இந்திரா காந்தி இந்தியப் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

★1981 - ஈரானில் 14 மாதங்களுக்கு முன்னர் பணயக் கைதிகளாகப் பிடிக்கப்பட்ட 52 அமெரிக்கர்களை விடுவிக்க ஐக்கிய அமெரிக்காவும் ஈரானும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

★1983 - நாசி போர்க் குற்றவாளி கிளவுஸ் பார்பி பொலிவியாவில் கைது செய்யப்பட்டான்.

★1986 - முதற் கணனி நச்சுநிரலான பிரெயின் பரவத் தொடங்கியது.

★1997 - 30 ஆண்டுகளுக்குப் பின்னர் யாசர் அரபாத் ஹெப்ரோன் திரும்பினார்.

★2006 - சிலவாக்கியாவின் விமானப்படை விமானம் ஹங்கேரியில் வீழ்ந்து நொருங்கியது.

★2007 - இலங்கையின் கிழக்கே மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த வாகரையைத் தாம் கைப்பற்றிவிட்டதாக இலங்கை இராணுவம் அறிவித்தது.

### பிறப்புகள்

★1736 - ஜேம்ஸ் உவாட், கண்டுபிடிப்பாளர் (இ. 1819)

★1807 - றொபர்ட் ஈ. லீ, அமெரிக்கப் பொறியியலாளர். (இ. 1870)

★1809 - எட்கார் அலன் போ, அமெரிக்க எழுத்தாளர், கவிஞர். (இ. 1849)

★1839 - பால் செசான், பிரெஞ்சு ஓவியர். (இ. 1906)

★1912 - லியோனிட் கண்டரோவிச், நோபல் பரிசு பெற்ற ரஷ்யப் பொருளியலாளர். (இ. 1986)


★1933 - சீர்காழி எஸ். கோவிந்தராஜன், கர்நாடக, திரையிசைப் பாடகர் (இ. 1988)

### இறப்புகள்

★1905 - தேவேந்திரநாத் தாகூர், இந்தியப் பகுத்தறிவாளர் (பி. 1817)

★1990 - ஓஷோ, இந்திய ஆன்மீகவாதி (பி. 1931)

**2006 - புளூட்டோவுக்கான முதலாவது நியூ ஹரைசன்ஸ் என்ற விண்ணுளவியை நாசா விண்ணுக்கு ஏவியது.**





வட மாகாண மட்ட கால்கோள் விழா நேற்று கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் நாடாவை வெட்டி திறந்து வைப்பதையும் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் வட மாகாண கல்வி பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எல்.இளங்கோவன் ஆகியோர் உரையாற்றுவதையும் மாணவருக்கு சின்னம் சூட்டுவதையும் கலை நிகழ்வையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)

## அபிவிருத்திப் பாதையில் வெற்றிநடை போடும் சனச அபிவிருத்தி வங்கி

சனச அபிவிருத்தி வங்கியின் யாழ்ப்பாணக்கிளை தனது முதலாவது ஆண்டு பூர்த்தியினை வெற்றிக்களிப்புடன் இன்று புதன்கிழமை இனிதே பூர்த்தி செய்கின்றது. இதனை சிறப்பிக்கும் வண்ணம் யாழ். மாவட்டத்திலுள்ள 21 சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவு சங்கங்களின் செயற்பாட்டினை மேம்படுத்தும் நோக்குடனும் சனச அபிவிருத்தி வங்கியின் பிரதான பங்குத்தாரர்களாகிய கூட்டுறவு சங்கங்களினை வலுப்படுத்தும் நோக்குடனும் 17 இலட்சம் ரூபாவினை நன்கொடையாக வழங்கி தன்னை மகிழ்வித்த நிகழ்வு அண்மையில் சனச அபிவிருத்தி வங்கியின் யாழ்ப்பாணக் கிளையில் இடம்பெற்றது.

சனச அபிவிருத்தி வங்கியானது இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவு செய்யப்பட்ட விசேட சிறப்பியல்பு வாய்ந்த வங்கியாகும். யாழ். மாவட்டத்தின் அபிவிருத்திப் பாதையில் கிராமப்புற மக்களினது வாழ்வாதாரத்தினை கட்டியெழுப்பும் நோக்குடன் வடக்கின் வசந்தம் கடன்திட்டத்தில் கடந்த வருடம் 1000 மேற்பட்ட பயனாளிகிற்கு 60 மில்லியனிற்கு மேற்பட்ட தொகையினை கடனாக வழங்கியுள் ளது.

இதில் பெரும்பாலானவர்கள் கிராமபுற விவசாயிகள், சிறுதொழில் முயற்சியாளர்கள், கூட்டுறவுத்துறை அங்கத்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் வியாபாரக் கடன், வாகன குத்தகைக் கடன் ,வீட்டுக்கடன், தங்க நகை அடைவுக்கடன், கல்விக்கடன்களையும் வழங்கி வருகின்றது.

இவ்வருடமும் அபிவிருத்தி பாதையில் வெற்றி நடைபோடும் இவ் வங்கியானது கூட்டுறவு துறையினரின் வைப்புகளிற்கு அதிக வட்டிவீதத்தினை வழங்குவதோடு வட்டி குறைந்த கடன்திட்டங்களினையும் வழங்கவுள்ளது.

மூத்த பிரஜைகளினை கௌரவிக்கும் முகமாக அவர்களின் நிலையான வைப்பிற்கு வருடாந்தம் 9.5% உயர் வட்டி வீதத்தினை வழங்குவதோடு மாதாந்தம் வட்டித் தொகையை பெறக்கூடிய வசதியினையும் ஏற்படுத்தியிருக்கின்றது. அத்தோடு சிறுவர் சேமிப்புக்களிற்கு ஆண்டிற்கு 4.5% தொடக்கம் 7.5% வரையிலான வட்டியினையும் வழங்குகின்றது.

தங்க நகை அடகுச்சேவையில் 35 ஆயிரம் என்ற உயர்வான அடகுத்தொகையினை வழங்குகின்றது. இன்றே இத்தனை சிறப்புமிக்க சனச அபிவிருத்தி வங்கியில் சங்கமம் ஆகி தங்களின் வங்கித் தேவையில் நிறைவு காண்பீர்.

முகாமையாளர்,
சனச அபிவிருத்தி வங்கி,
யாழ்ப்பாணம்.

## தனது இரண்டாம் ஆண்டில் கால் பதிக்கும் DFCC வங்கி

மக்கள் சேவையில் அதிதீவிர வளர்ச்சியடைந்து வரும் DFCC வங்கியானது இன்று தனது யாழ்.கிளையின் ஒரு வருட பூர்த்தியை வெற்றி விழாவாகக் கொண்டாடுகிறது.

ஆசியாவின் முதலாவது அபிவிருத்தி; வங்கி எனும் பெருமைக்குரிய DFCC வங்கியானது கடந்த 1956 ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்டு வாடிக்கையாளர் நலன் கருதி DFCC வர்த்தக வங்கி எனும் வணிக வங்கிப் பிரிவொன்றை கடந்த 2003 ஆம் ஆண்டில் நிறுவியது.

இவ் DFCC மற்றும் DFCC வர்த்தன வங்கிகள் கடந்த வருடம் ஜனவரி மாதம் 19 ஆம் திகதி வடமாகாணத்தில் தனது முதலாவது கிளையினை யாழ். மண்ணில் இல.141, கே.கே.எஸ் வீதியில் நிறுவியது.

இக்கிளையானது மிகக்குறுகிய காலத்தில் வாடிக்கையாளர் சேவை மற்றும் வாடிக்கையாளர் தொடர்பு ஆகியவற்றில் மிகச் சிறப்பாக செயற்பட்டு நகரத்தின் தொழில் அதிபர்கள், வியாபாரிகள் மற்றும் பொது மக்கள் இடையே அதிக வரவேற்பை பெற்றுள்ளது.

DFCC வங்கியின் யாழ். கிளையானது தனது செயற்பாடுகளில் வாடிக்கையாளரைத் திருப்திப்படுத்துவதை முதன்மை நோக்காக கொண்டுள்ளது.

இதில் வாகனக் குத்தகை மற்றும் அடகு சேவைகளில் அதி குறைந்த வட்டி வீதத்தையும் அதிக முதலையும் வழங்கி வாடிக்கையாளரின் வரவேற்பினைப் பெறுகிறது.

அதுமட்டுமன்றி வியா பார அபிவிருத்திக் கடன்களை மிகக் குறுகிய காலத்தில் விரைவாக வழங்கி பிரதேசத்தின் அபிவிருத்திக்குப் பெரும் பங்காற்றி வருகிறது.

இவ்வங்கியானது வாடிக்கையாளரின் நலனை நோக்காகக் கொண்டு இயங்கி தனது யாழ். கிளையின் ஒரு வருட பூர்த்தியினைக் கொண்டாடும் இத்தருணத்தில் தனது வெற்றிக்கு பங்களிப்பாக இருந்த வாடிக்கையாளர்கள் மற்றும் நலன் விரும்பிகள் யாவரையும் நினைவு கூர்ந்து இனி வரும் காலங்களிலும் தனது அளப்பெரிய சேவையைத் தொடர திடசங்கற்பம் கொள்கிறது.

கணம் நினைப்பீர்! கரிசனை காட்டுவீர்!

**பழைய மாணவர்களுக்கு பகிரங்க அழைப்பு**

யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில்
கல்வி பயின்று
பல்வேறு நிலைகளிலும் பணியும், சேவையும் ஆற்றும்
அனைத்து உள்ளங்களையும்

இக்கல்லூரியின் எழுச்சிக்கு வித்தாகும் வகையில் கருத்தொருமிக்கவராய் கைகொடுப்பவராய்க் கருதியழைக்கின்றோம்.

காலம்:-23.01.2011 ஞாயிறு பி.ப. 3.30 மணி

இடம்:-கல்லூரி மண்டபம்

வருகை தர இயலாதவர்கள் தங்கள் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் ஆகியவற்றைக் குறிப்பிட்டு 31.01.2011க்கு முன் தெரியப்படுத்த இடமுண்டு. கல்லூரி வளர்ச்சி சார்ந்த முன்மொழிவுகள் இடம்பெறவுள்ளமையால் தவறாது பங்கு பற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

திரு.என்.செல்வராசா, தலைவர் (ப.மா.சங்கம்)

தொடர்புகளுக்கு:-0212223456
E.mail.jcmmvnavothaya@gmail.com

திரு.வே.ஞானகாந்தன் அதிபர்.

(சி/2198)

## வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்ட ஒன்பது மாதக் கைக்குழந்தை

(கொழும்பு)

தம்புள்ள கண்டலம் குளத்திலிருந்து வழியும் வெள்ளத்தில் ஒன்பது மாதமேயான கைக்குழந்தையொன்று அடித்துச் செல்லப்பட்டுள்ள சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

கண்டலம் வாவியின் புற வான் கதவுக்கு அண்மையாக பேருந்து ஒன்றும் மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளானதையடுத்தே குறித்த சம்பவம் நடைபெற்றுள்ளது.

விபத்தின் காரணமாக மோட்டார் சைக்கிள் வெள்ளத்தில் உருண்டு விழுந்துள்ளது.

அதனை ஓட்டி வந்தவர் ஸ்தலத்திலேயே பலியாகியுள்ளார். பின் இருக்கையில் பயணிக்க தாயும் ஒன்பது மாதமேயான கைக்குழந்தையும் மோட்டார் சைச்கிளுடன் வெள்ளத்தில் விழுந்து நீர்ப்பிரவாகத்தில் சிக்கி அடித்துச் செல்லப்பட்டுள்ளனர்.

அங்கிருந்தவர்களின் துரித முயற்சி காரணமாக தாய் மட்டும் மீட்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அவரது நிலையும் கவலைக்கிடமானதாகவே இருப்பதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஆயினும் ஒன்பதே மாதமான கைக் குழந்தை வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு விட்டது.

அதன் உடல் கூட இதுவரை கிடைக்கவில்லை என்று அறியப்படுகின்றது.

(ஸ்ரீ-2)

வயிற்றை மட்டுமே நினைப்பவன் தலையைப் பட்டினி போடுகிறான்.

~ ஓர் அறிஞர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## தமிழ் அரசியல் கட்சியினர் அரையில் முழத்துண்டு கட்டலாம்

தமிழ் மக்களுக்காகத் தமிழ் அரசியல் கட்சிகள் ஒன்றுபட வேண்டுமென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கேட்டுள்ளார். நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடந்த பொங்கல் விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

தமிழ் மக்களுக்காகத் தமிழ் அரசியல் கட்சிகள் ஒன்றுபட வேண்டுமென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கேட்குமளவுக்கு எங்கள் வண்டவாளம் வெளிப்பட்டுவிட்டது என்பது உறுதியாகின்றது.

தமிழ் மக்களுக்காக ஒன்றுபடுங்கள் என ஜனாதிபதி கேட்டதிலிருந்து சிங்களவர்களுக்கு நல்ல அரசியல் தலைமை இருக்கிறது. முஸ்லிம்களுக்கும் சிறந்த தலைமை. ஆனால் பாவம் தமிழ் மக்களுக்கு அரசியல் தலைமை வாய்க்கவே இல்லை. ஒவ்வொரு கட்சியும் ஒவ்வொரு பக்கம். சுயநலமொன்றுதான் தமிழ் அரசியல் தலைமைகளின் அடிப்படை.

இந்நிலையில் தமிழ் மக்கள் பாவங்கள் என்று கருதியே தமிழ் அரசியல் கட்சிகளை ஒற்றுமைப்படுமாறு ஜனாதிபதி கேட்டுள்ளார்.

கடவுளே! தமிழ் மக்களுக்காகத் தமிழ் அரசியல் கட்சிகள் ஒன்றுபட வேண்டுமென ஜனாதிபதி கேட்டுக்கொண்டமை, திரும்பத் திரும்ப நினைவுக்கு வருகிறது. மறந்து விடலாம் என்றால் முடியவே இல்லை.

வன்னிப் போர் நடத்தி அதில் வெற்றி பெற்ற ஜனாதிபதி தமிழ் அரசியல் கட்சிகளைப் பார்த்து, 'தமிழ் மக்களுக்காக ஒன்றுபடுங்கள்' என்று கேட்டாரே!

அந்தக் கணமே தமிழ்க் கட்சிகள் ஒரு முழத்துண்டைத் தங்கள் மானத்திற்காக அரையில் சுற்றிக்கொண்டு, காசி சென்று அங்கு அதையும் அகற்றிக் கங்கையில் நீராடி, மானிடத்தின் கண்ணுக்குத் தெரியாமல் காடுகளில் சென்று தவம் இருக்க வேண்டும்.

நாம் சொல்வது தவறெனத் தமிழ்க் கட்சிகள் ஏதேனும் கூறுமாயின், நாங்கள் ஒற்றுமைப்பட்டு உள்ளோம் என்பதை உறுதிப்படுத்தி ஜனாதிபதியின் உரைக்குப் பதிலளிக்க வேண்டும்.

இதைச் செய்யும் தகுதி தமிழ் அரசியல் கட்சிகளுக்கு உண்டா? தமிழ் மக்கள் எல்லாவற்றையும் இழந்து வாழும் இந்நிலையில்கூட, உங்களிடம் ஒற்றுமையில்லை, அரசியல் ஞானம் இல்லை, இராஜதந்திரம் இல்லை, சமயோசித புத்தி இல்லை. அப்படியானால் தமிழினம் இன்னும் படாப்பாடு படும்.

நீங்களும் இருந்துகொண்டு தமிழினம் படாப்பாடுபடுவதைவிட நீங்கள் இல்லாமல் படாப்பாடு படுவதில் நியாயம் கூட இருக்கும்.

ஆகையால் தமிழ் மக்களின் இத்துன்பகரமான அவல நிலைக்கு ஏதோவொரு வகையில் நீங்களும் காரணம் என்ற அடிப்படையில் உங்கள் அரசியலைப் புதுமைப்படுத்துங்கள். அதன் மூலம் தமிழினம் பெருமைப்படும்.

# இலங்கையில் அனைத்து மதமும் சமம் பிரதமரைக் கண்டிக்கிறார் தேரர்

(கொழும்பு)

இலங்கை நாட்டிற்குள் அனைத்து மதமும் சமம். எந்த மதத்திற்கும் முன்னுரிமை இல்லை எனப் பிரதமரும் புத்த சாசன அமைச்சருமான டி.எம்.ஜயரட்ண தெரிவித்த கருத்திற்குச் சிங்கள பௌத்தக் கட்சியான ஜாதிக ஹெல உறுமய கடும் கண்டனம் தெரிவித்துள்ளதுடன், இது தொடர்பில் பிரதமர் விளக்கமளிக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளது.

வத்திக்கானில் கிறிஸ்தவ மதம் தொடர்பிலும் சவூதி அரேபியாவில் இஸ்லாம் மதம் தொடர்பிலும் நேபாளத்தில் இந்து சமயம் தொடர்பிலும் பேசுவது மதவாதமல்ல. அதேபோன்றே இலங்கையில் பௌத்தம் தொடர்பில் பேசுவதும் மதவாதம் ஆகாது எனச் சுட்டிக்காட்டிய ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் கலாநிதி ஓமல்பே சோபித தேரர், பிரதமர் தாம் எங்கே இருக்கின்றார் என்பதை மறந்துவிட்டாரா? எனக் கேள்வி எழுப்பியதுடன், அவர் எந்த நாட்டின் பிரதமர் என்பதையும் மறந்துவிட்டார்.

பிரதமர் தெரிவித்த கருத்தானது, அவர் வகிக்கும் பிரதமர் பதவிக்கும் நாட்டின் அரசியலமைப்புக்கும் முரணானது. அவர் பதவியேற்கும் போது நாட்டின் அரசியலமைப்பிற்கு ஏற்பவே செயற்படுவதாகக் குறிப்பிட்டுள்ள நிலையில் அவரது இந்தக் கருத்து அரசியலமைப்பை மீறும் செயலாகவே அமைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அரசியலமைப்பைப் பொறுத்த மட்டில் பௌத்த சமயத்துக்கே முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. பிரதமர் அனுபவம் வாய்ந்த அரசியல்வாதி, எனவே அவரை அறியாமல் இந்தக் கருத்தை வெளியிட்டிருக்க மாட்டார். அவரது இந்தக் கருத்துத் தொடர்பில் அவர் தெளிவுபடுத்த வேண்டும் எனவும் ஓமல்பே சோபித தேரர் கேட்டுக்கொண்டார்.

அத்துடன் இலங்கைப் பிரதமர் தீய சக்திகளுக்கு அடிபணிந்து விட்டாரா? என்ற சந்தேகம் தமக்கு எழுவதாகக் குறிப்பிட்ட அவர், மன்னாரில் நடைபெற்ற நல்லிணக்க ஆணைக்குழு அமர்வில் இராயப்பு ஜோசப் தெரிவித்த கருத்துக்களுடன் பிரதமரின் கருத்துக்கள் ஒத்துப்போவதாகக் குறிப்பிட்டார்.

இலங்கையில் சிங்கள, பௌத்த வாதம் தொடர்பில் அச்சம் நிலவுவதாக இராயப்பு ஜோசப் தெரிவித்திருந்ததாகச் சுட்டிக்காட்டிய தேரர் அரந்தலாவில் பிக்குகள் படுகொலை செய்யப்பட்ட போதும் தலதா மாளிகை குண்டுத் தாக்குதலுக்கு உள்ளான போதிலும் கொழும்பிலுள்ள கதிரேசன் கோயிலில் நடைபெற்ற உற்சவத்தில் சிங்களவர்கள் தேங்காய் உடைத்ததாகவும் குறிப்பிட்டார்.

இலங்கையில் அனைத்துச் சமயங்களும் சமம். எந்தச் சமயத்திற்கும் முன்னுரிமை இல்லையெனப் பிரதமர் டி.எம். ஜயரட்ண அண்மையில் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-5)

## வெள்ள நிவாரணம் சீனாவும் நிதியுதவி

இலங்கையில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான அவசர மனிதாபிமான உதவிகளை மேற்கொள்வதற்காகச் சீனா 10 மில்லியன் யுவான் நிதி உதவி செய்துள்ளது.

இந்நிதிக்கான காசோலையை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸிடம் இலங்கைக்கான சீனத் தூதுவர் யங் கியுப்பிங் நேற்றுக் கையளித்துள்ளார்.

இந்நிகழ்வில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவும் கலந்து கொண்டார்.

இலங்கை மீதான நல்லெண்ண அடிப்படையில் கொழும்பில் அமைந்துள்ள சீனத் தூதரகத்தின் அதிகாரிகளின் சார்பில் இந்நிதியுதவி வழங்கப்படுவதாகச் சீனத் தூதுவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இலங்கையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்குச் சீன அரசாங்கத்தின் சார்பில் ஆழ்ந்த கவலையைத் தெரிவித்த அவர், வெள்ளப்பெருக்கால் பாதிக்கப்பட்ட மக்கள் விரைவில் தமது இயல்பு வாழ்வுக்குத் திரும்புவார்கள் என்று நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

அதேவேளை, இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் வேண்டுகோளுக்கு ஏற்ப வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட வீடுகளைத் திருத்துவதற்கான வீட்டுக் கூரைகளை வழங்குவது தொடர்பில் தாம் பரிசீலிப்பதாகவும் தெரிவித்துள்ளார். (ந-5)

## பொருட்களின் சில்லறை விலை விளம்பரங்களில் அவசியம்

ஊடகங்களில் விளம்பரப்படுத்தப்படும் நுகர்வுப் பொருட்களுக்கான சில்லறை விலைகள் விளம்பரங்களில் குறிப்பிடப்படுவது அவசியம் என நுகர்வோர் அதிகார சபை நேற்று விடுத்துள்ள விசேட வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிட்டுள்ளது.

பெப்ரவரி முதலாம் திகதி முதல் இவ்விதி அமுலுக்கு வரும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நுகர்வோர் அதிகார சபைச் சட்டத்தின் 10 (1)ஆம் பிரிவின் கீழ், பத்திரிகைகள், திரைப்படங்கள், தொலைக்காட்சிகள், கட்புல மற்றும் செவிப்புல, இணையத்தள அல்லது ஏனைய அச்சு ஊடகங்களில் விளம்பரப்படுத்தப்படும் விற்பனைப் பொருட்களின் தயாரிப்பாளர்கள், இறக்குமதியாளர்கள், விநியோகஸ்தர்கள் அனைவரும் தாம் விளம்பரம் செய்யும் பொருட் களின் சில்லறை விலையை அவ்விளம்பரங்களில் குறிப்பிடுவது அவசியமானதாகும் என மேற்படி அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வித்தியாசமான அளவு, மாதிரி, வகை, தரம் கொண்ட பொருட்கள் விளம்பரப்படுத்தப்பட்டிருப்பின் அவற்றின் ஒவ்வொரு வகைப் பொருட்களின் விலைகளும் குறிப்பிடப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

## மலேசியாவிலிருந்து திருப்பி அனுப்பப்பட்ட மூன்று நபர்கள் பிணையில் விடுவிப்பு

(கொழும்பு)

போலி விசாவில் மோசடியான முறையில் மலேசியா செல்ல முயன்று அங்கிருந்து திருப்பி அனுப்பப்பட்ட போது கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த மூன்று சந்தேக நபர்களை நீர்கொழும்பு பிரதான நீதவான் தலா 15 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும் தலா இரண்டு இலட்சம் ரூபா கொண்ட இரண்டு நபர்களின் சரீரப் பிணையிலும் விடுதலை செய்ய உத்தரவிட்டார்.

டிக்கோயா மற்றும் ஹற்றன் பிரதேசங்களைச் சேர்ந்த மூன்று நபர்களே விடுதலை செய்ய உத்தரவிடப்பட்டவர்களாவர்.

சந்தேக நபர்கள் கடந்த 2010 ஆண்டு டிசம்பர் மாதம் 8 ஆம் திகதி மலேசிய அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டபோது கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப் பட்டுள்ளனர். (ஸ்ரீ)

## நயினையில் தைப்பூசத் திருவிழா

வரலாற்றுச் சிறப்பு மிக்க நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் தைப்பூசத் திருவிழா நாளை வியாழக்கிழமை சிறப்பாக நடைபெறவுள்ளது.

அன்றயதினம் விஷேட அபிஷேகங்கள் ,பூசைகள் நடைபெற்று அம்பாள் அழகிய கைலாய வாகனத்தில் வீதியுலா வரும் அலங்காரக் காட்சியும் இடம்பெறும்.

அடியார்களுக்கான விஷேட வசதிகளும் வித்தியாரம்பம் , அன்னபிரசாதனம்,கர்ண வேதனம் ஆகியனவும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. (ஸ்ரீ)

## சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்



வாழ்க்கையில் நான் கற்றுக் கொண்ட ஒரு பாடம் எதுவெனில் குறிக்கோளில் செலுத்தும் அதே கவனத்தை நடைமுறைக்குக் கொண்டு வரும் போதும் செலுத்த வேண்டும் என்பதுதான். வெற்றியின் இரகசியமே இதில் புதைந்துள்ளது. குறிக்கோளில் காட்டப்படும் அக்கறை, செயல்படுத்துவதில் இருக்க வேண்டும்.

வலியற்றவர்கட்கு இங்கு இடமில்லை. இம்மையிலும் மறுமையிலும் இல்லை. பலவீனம் அடிமைத்தனத்தில் புகுத்தி விடும். உடலளவிலும் உள்ளத்தளவிலும் வரக்கூடிய எல்லாத் துன்பங்களுக்கும் இந்தப் பலவீனமே காரணம். பலவீனமே மரணம்.

இதுவே பேருண்மை. வலிமையே வாழ்வு! கோழைத்தனமே மரணம்! வலிமையே இன்பம்; வளமை; மரணமிலாப் பெருவாழ்வு: எனவேதான் நான் கூறுகிறேன்; அளப்பரிய ஆன்மீக ஆற்றலை, தெய்வீக ஆற்றலை நாம் பெற வேண்டும். தெய்வீகப் பேராற்றலால் ஆன்மீகத்தை அடைவதொன்றே வழி. விடுதலையுறுதற்கு அதுவே பெருவழி. எதற்கு நம்மைத் தகுதியாக்குகிறோமோ அதை நாம் பெற்று விடுகிறோம்.


# அதிக இலாபம் பெறும் ஜாதக அமைப்பு யாருக்கு?

ஜனனலக்னத்திற்கு பதினொராம் இடமானது மிக முக்கியமான ஸ்தானமாக கருதப்படுகிறது. இதன் மூலம் உயர்ந்த வாகனங்கள், தங்கம் போன்ற விலையுயர்ந்த உலோகங்களை அடைதல், மற்றவர்களால் கௌரவிக்கப்படுதல், விலையுயர்ந்த வாசனைத் திரவியங்களை அனுபவித்தல், தலைமை தாங்குவது, அரசியல் இலாபங்கள் போன்றவை பற்றி அறிய முடியும்.

இங்கே சொல்லப்படும் பலன்கள் ஜாதகத்தில் இராஜயோகம், சக்கரவர்த்தி யோகம் போன்றவை அமையப் பெற்றவருக்கு பொருத்தமாக அமையும். அவரவருக்கு தகுந்த யோகத்தின்படி கிடைக்கும் ஆதாயம் உயர்ந்து கொண்டே போகும்.

ஒருவர் ஜனனமான லக்னத்திற்கு மேடமானது பதினொராவது வீடாகத் லாபஸ்தானமாக அமையும் போது அந்த ஜாதகர், பசு, யானை, குதிரை போன்ற விலங்குகளால் உயர்ந்த இலாபத்தை அடைவார். அரசியல் தலைவர்களை சார்ந்தும், வெளிநாடுகளுக்குச் சென்று அங்குள்ள முக்கிய மனிதர்களை சந்திப்பதாலும் மிகுந்த இலாபத்தை அடைவார்.

# சுயதொழிலால் புகழ் பெறுபவர் யார்?



ஒருவர் ஜனனமான இலக்னத்திற்கு ரிஷபமானது, இலாப ஸ்தானமாக அமையும் போது அந்த ஜாதகர், உயர்ந்த பதவியில் உள்ள பெரிய மனிதர்களால் நினைத்த காரியத்தை சாதித்து விடுகிறார். இவ்வித யோகம் கொண்டவர்கள் நல்ல நட்புகளாலும், வங்கித் தொடர்புகள், பங்கு, தரகு வியாபாரத்தாலும், வட்டி வணிகத்தாலும், நிலம், பயிர் போன்றவற்றாலும் பெருத்த இலாபத்தை அடைகிறார்.

ஒருவர் ஜனனமான இலக்னத்திற்கு மிதுனமானது, இலாப ஸ்தானமாக அமையும் போது அந்த ஜாதகர், பெண்கள் வாங்கும் பொருட்களை விற்பவராகவும், வாசனைத் திரவியத்தாலும், துணிமணிகளை விற்பதாலும், ஆடம்பரமான வாகனங்கள், பொருட்கள் இவற்றை வாங்கி விற்பதாலும் நினைத்த இலாபத்தை அடைகிறார். மேலும், இவருக்கு செய்யும் சுயதொழிலால் புகழ் உண்டாகும்.

# பெண்களால், நினைத்ததை சாதிப்பவர் யார்?

ஒருவர் ஜனனமான இலக்கினத்துக்கு கடகமானது இலாபஸ்தானமாக அமையும் போது அந்த ஜாதகர் உயர்ந்த பதவியில் உள்ள பெண்களாலும் அரசியலில் உள்ள திறமைமிக்க பெண்களாலும் நினைத்த காரியத்தை நினைத்தபடி சாதிப்பார். மேலும் விவசாயத்தாலும் தனலாபத்தை அடைவார். மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்ற புத்தகங்கள் எழுதுவதாலும் நல்ல மனிதர்களுக்கு உதவியாக இருப்பதாலும் வெகு திரவியத்தை அடைவார்கள்.

ஒருவர் ஜனனமான இலக்கினத்திற்கு சிம்மமானது இலாபஸ்தானமாக அமையும் போது அந்த ஜாதகர் வேட்டையாடுவதாலும் சட்டத்திற்கு விரோதமான செயல்களை செய்வதாலும் இலாபத்தை அடைவார். சில நூல்களில் வெளிநாட்டுப் பயணத்தால் பிரச்சினைகளைச் சந்திப்பார் என்று சொல்லப்பட்டுள்ளது. இன்னும் சில நூல்களில் நெருப்புத் தொழிலாலும் மலை, காடுகளைச் சார்ந்தும் ஜீவன இலாபம் அடைவார் என்றும் சொல்லப்படுகிறது.




# மற்றவர்களை மயக்கி ஆளும் யோகம்....

ஒருவர் ஜனனமான இலக்னத்திற்கு கன்னியானது, இ லாப ஸ்தானமாக அமையும் போது அந்த ஜாதகர், மற்றவர்களை மயக்கி ஜாலம் செய்வதாலும், திறமையாக வாதம் செய்வதாலும், மாந்திரீக சக்திகளாலும் நினைத்த இலாபத்தை அடைவார்.

ஒருவர் ஜனனமான இலக்னத்திற்கு துலாவானது, இலாப ஸ்தானமாக அமையும் போது அந்த ஜாதகர், நல்ல உண்மையான நண்பர்களாலும், திறமையான வணிகர்கள் மூலமாகவும் மிகுந்த இலாபத்தைப் பெறுவார். மேலும், மற்றவர்களிடம் இணங்கிப் பேசுவதால் அதிகாரம் உள்ள சூழ்நிலையை உருவாக்கிக் கொள்வார்.

ஒருவர் ஜனனமான இலக்னத்திற்கு விருச்சிகமானது, இலாபஸ்தானமாக அமையும்போது அந்த ஜாதகர், தர்மங்களில் பற்றுக் கொண்டரவாகவும், வேத வாக்கியங்களை அறிவதாலும், மற்றவர்கள் எதிர் பாராத விதத்தில் திறமையாக செயற்படுத்துவதாலும் உயர்ந்த இலாபத்தை பெறுவார்.

# அரசியல் இலாபம் பெறுபவர் யார்?

ஒருவர் ஜனனமான இலக்னத்திற்கு தனுசுவானது இலாபஸ்தானமாக அமையும் போது அந்த ஜாதகர், அரசியல் தலைவர் களை அண்டியிருப்பதால் இலாபம் அடை வார். மற்றவர்கள் செய்யத் தயங்கும் செயல்களைக்கூட கடும் முயற்சியால் செய்தும் இலபாம் பெறுவார். குணத்தால் தாழ்ந்த மனிதர்களையும் வசப்படுத்தி இலாபமடை வார்.

ஒருவர் ஜனனமான இலக்னத்திற்கு மகரமானது. இலாப ஸ்தானமாக அமையும் போது அந்த ஜாதகர், கடல் பயணங்களாலும், கடல் சம்பந்தப்பட்ட பொருட்களாலும், வாரி வழங்குவதாலும், தைரியத்தாலும், எதிர்பாராமல் எடுத்த காரியத்தை சாதிப்பதாலும் மிகுந்த தனலாபத்தை அடைவார், இவர் கற்ற கல்வியால் உயர்ந்த தலைவர்களின் நட்பு உண்டாகும்.

# ஏற்றுமதி - இறக்குமதி வியாபாரம் யாருக்கு அமையும்?

ஒருவர் ஜனனமான இலக்னத்திற்கு கும்பமானது இலாப ஸ்தானமாக அமை யும் போது அந்த ஜாதகர், கடல் வணிகத்தாலும், ஏற்றுமதி, இறக்குமதி வியாபாரத்தாலும், அரசியல் மற்றும் அதிகாரம் உள்ளவர்களின் காரணமாக வெளிநாடு செல்வதாலும் மிகுந்த தன இலாபத்தை அடைவார்.

ஒருவர் ஜனனமான இலக்னத்திற்கு மீனமானது, இலாப ஸ்தானமாக அமையும் போது அந்த ஜாதகர், நல்ல நண்பர்களாலும், நண்பர்களை உருவாக்கிக் கொள்வதாலும், திறமையாகப் பேசுவதாலும் அடுக்கு மொழிகளாலும், உயர்ந்த பதவியையும், தனலாபத்தையும் வாழ்வில் அடைவார்.

# ஏப்ரலுக்கு முன் ஐ.தே.க.தலைமைத்துவமும் எதிர்க்கட்சித் தலைவர் பதவியும் என்வசமாகும்

## சஜித் பிரேமதாச எம்.பி.உறுதி

(கொழும்பு)

எதிர்வரும் ஏப்ரல் மாதத்திற்கு முன் ஐக்கிய தேசியக்கட்சியின் தலைமைத்துவம் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் பதவி என்பன தன்வசம் வந்துவிடும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச உறுதியான நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

அம்பாந்தோட்டையில் திஸ்ஸமஹாராமையில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு நம்பிக்கை தெரிவித்துள்ளார். திஸ்ஸ மஹாராமையில் உள்ளுராட்சித் தேர்தல்களுக்கான அபேச்சர்களை அறிமுகப்படுத்தும் நோக்கில் குறித்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

தொடர்ந்தும் கருத்துத்தெரிவித்த அவர், எதிர்க்கட்சித் தலைவர் பதவி என்பது தனது பதவியை மட்டும் காப்பாற்றிக்கொண்டு பிரச்சினைகளை விட்டு தூர விலகியோடும் ஒருவரிடம் இருக்கக்கூடாது. அதேபோலவே கட்சியினதும் கட்சி உறுப்பினர்களினதும் பிரச்சினைகளைத் தீர்க்கும் ஆற்றல் கொண்ட ஒருவரிடம்தான் கட்சித் தலைமைத்துவம் இருக்க வேண்டும்.

அந்தவகையில் எதிர்வரும் சிங்கள, தமிழ்ப் புத்தாண்டுக்கு முன்பதாக எதிர்க் கட்சித்தலைவர் பதவி மட்டுமன்றி ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவராகவும் நான் உங்களுடன் இணைந்து புத்தாண்டைக் கொண்டாடுவேன் என்பதை உறுதியாக உங்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகின்றேன்.

இனிவரும் தேர்தல்கள் அனைத்துக்கும் ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவராகவும் எதிர்க்கட்சித் தலைவராகவும்தான் நான் முகம் கொடுப்பேன். அவற்றின் மூலமாக கட்சியை வெற்றிப் பாதையில் வழிநடத்திச் செல்வேன்.

தந்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அம்பாந்தோட்டையிலிருந்து உருவானதைப் போலவே ஐக்கிய தேசியக் கட்சியின் அடுத்த ஜனாதிபதியும் அம்பாந்தோட்டையிலிருந்துதான் உருவாகப் போகின்றார். அது நான்தான் என்றும் அவர் கூறினார்.

(ஸ்ரீ-2)

# மஹா கும்பாபிஷேகம்

யாழ். நாயன்மார்கட்டு வெயிலுகந்த விநாயகர் தேவஸ்தான மஹாகும்பாபிஷேகம் நாளை வியாழக்கிழமை முற்பகல் 10.06 மணி முதல் 11.28 மணிவரையுள்ள சுபவேளையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் நாளை காலை 7 மணி முதல் 9மணிவரை பக்தர்கள் பால்காப்புச் சாத்துதல் நிகழ்வும் பின்னர் மஹாகும்பாபிஷேக நிகழ்வும் நடைபெறும். (ஸ்ரீ-9)

# தமிழர்களின் பிரச்சினைகள் தொடர்பில் சிங்கள மக்கள் குரல் கொடுக்க வேண்டும்

## ரவி கருணாநாயக்க எம்.பி. கோரிக்கை



(கொழும்பு)

தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் ஒவ்வொரு சிங்கள மக்களும் அச்சமின்றிக் குரல் கொடுக்க முன்வர வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க கோரிக்கை விடுத்துள்ளார்.

சேர் பொன் அருணாசலத்தின் 150 ஆவது ஜனனதினத்தை முன்னிட்டு ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆங்கிலேயர் ஆட்சியின் போது 1910 ஆம் ஆண்டுகளிலேயே சேர் பொன் அருணாசலம் சிங்கள மக்களுக்காக குரல் எழுப்பியவர். சிங்கள மகாபோயா விடுமுறை பிரகடனம் அவரது முயற்சியால் கிடைத்தவொரு வெற்றியாகும். அதற்கு மேலாக அவர் சிங்கள- தமிழ் இன நல்லுறவுக்கும் பாடுபட்டார்.

அன்று அவர் சிங்கள மக்களுக்காக குரல் கொடுத்ததை நினைவுபடுத்தும் விதத்தில் நான் இன்று தமிழ் மக்களுக்காக அச்சமின்றிக் குரல் கொடுத்து வருகின்றேன். என்னைப் போலவே ஏனைய சிங்கள மக்களும் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் அச்சமின்றிக் குரல் கொடுக்க முன்வர வேண்டும்.

அதற்கு மேலாக இலங்கையில் வாழும் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களிடையே இன நல்லுறவு கட்டியெழுப்பப்படுவதற்கான முயற்சிகளும் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதாகவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

(ஸ்ரீ-2)

# உலகக் கிண்ணத்தை இலங்கை அணி சுவீகரிக்க வேண்டும்; யாழ்.கிரிக்கெட் இரசிகர்கள் அணிதிரண்டு வாழ்த்தினார்கள்







(யாழ்ப்பாணம்)

ஐ.சி.சி உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் பங்கேற்கும் இலங்கை அணி வீரர்களுக்கு வாழ்த்துத் தெரிவிக்கும் முகமாக மிகப் பெரிய பந்து ஒன்று நேற்று யாழ்ப்பாணத்திற்கு எடுத்து வரப்பட்டது.

இதன்போது பந்தின் மீது யாழ். கிரிக்கெட் இரசிகர்கள் தங்கள் கைகளைப் பதித்து இலங்கை அணி வீரர்களுக்கு வாழ்த்துத் தெரிவித்தனர்.

ஐ.சி.சி 10ஆவது உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் எதிர்வரும் 18ஆம் திகதி ஆரம்பமாகி இலங்கை, இந்தியா மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் ஒரு மாத காலம் நடைபெறவுள்ளது.

இத்தொடரை முன்னிட்டு இலங்கை அணியினர் கடந்த 1996ஆம் ஆண்டு கைப்பற்றிய உலகக் கிண்ணம் நாடு பூராகவும் ஊர்வலம் வருகிறது.

அத்துடன் இலங்கை அணி வீரர்களுக்கு இரசிகர்களின் வாழ்த்துக்களைப் பெறுவதற்குப் பெரிய பந்தும் ஊர்வலம் வருகிறது.

இந்நிலையில் யாழ். மாவட்டக் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் உலகக் கிண்ணமும் பெரிய பந்தும் நேற்று யாழ்ப்பாணத்திற்கு எடுத்து வரப்பட்டது.

இவ் ஊர்வலம் நேற்றுக் காலை 10 மணிக்கு யாழ்.போதனா வைத்தியசாலைக்கு முன்பாகவிருந்து யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரி மாணவர்களின் பான்ட் வாத்திய இசையுடன் யாழ்.மத்திய பேருந்து நிலையத்திற்கு முன்பாக எடுத்து வரப்பட்டது.

இதில் இலங்கை அணி கடந்த 1996 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றிய போது அணியில் இடம்பெற்ற வீரர்களில் ஒருவரான ரவீந்திர புஷ்பகுமார உலகக் கிண்ணத்தைத் தாங்கி வந்தார்.

பின்னர் பேருந்து நிலையத்திற்கு முன்பாக வைத்து யாழ்.கட்டளைத் தளபதியின் பிரதிநிதி பிரிகேடியர் பிராங்ளின் றொட்றிக்கோ பந்தில் கைகளைப் பதித்து வாழ்த்துத் தெரிவிக்கும் நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

தொடர்ந்து கிரிக்கெட் சங்கப் பிரதிநிதிகள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், கிரிக்கெட் இரசிகர்கள் எனப் பெருமளவானோர் பந்தின் மீது கைகளைப் பதித்து இலங்கை அணியினருக்கு வாழ்த்துத் தெரிவித்தனர்.

இதேவேளை உலகக் கிண்ணம், பந்து இன்று சமயத் தலங்களுக்கு எடுத்துச் சென்று மதத் தலைவர்களின் ஆசி பெறப்படவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## உலகக் கிண்ணத் தொடருக்கான ஆஸி.அணியில் பிரெட்லீ, மைக் ஹஸி

உலகக் கிண்ண கிரிக்கெட் தொடருக்கான 15 பேர் கொண்ட அவுஸ்திரேலிய அணி விபரம் நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 3 வருடங்களில் அடிக்கடி காயங்களினால் பாதிக்கப்பட்டிருந்த வேகப்பந்து வீச்சாளர் பிரெட்லீ, அண்மையில் காலில் காயத்திற்குள்ளான மைக்கல் ஹஸியும் இவ்வணியில் சேர்க்கப்பட்டுள்ளனர். மைக்கல் ஹஸியின் சகோதரர் டேவிட் ஹஸியும் இவ்வணியில் இடம்பெற்றுள்ளார்.

இறுதியாக நடைபெற்ற 3 உலகக் கிண்ணப் போட்டிகள் உட்பட 4 உலகக் கிண்ணப் போட்டிகளில் அவுஸ்திரேலிய அணி சம்பியனாகியமை குறிப்பிடத்தக்கது.

தொடர்ச்சியாக நான்காவது தடவையாக உலகக் கிண்ணத்தை வெல்லக் கூடிய அணியை நாம் தெரிவு செய்துள்ளோம் என அவுஸ்திரேலியக் கிரிக்கெட் தேர்வுக்குழுத் தலைவர் அன்ட்ரூ ஹில்டிச் தெரிவித்துள்ளார்.

அனுபவமிக்க அணித் தலைவர் ரிக்கி பொன்டிங் மற்றும் மைக்கல் கிளார்க், பிரெட்லீ போன்ற மூத்த வீரர்களும் ஸ்டீவ் ஸ்மித் போன்ற திறமையான இளம் வீரர்களும் அவ்வணியில் இடம் பெற்றுள்ளனர் என ஹில்டிச் கூறியுள்ளார்.

**அணி விபரம்:**

ரிக்கி பொன்டிங் (தலைவர்), மைக்கல் கிளார்க், டக் பொல்லிங்கர், பிரட் ஹடின், ஜோன் ஹாஸ்டிங்ஸ், நேதன் ஹௌரிட்ஸ், டேவிட் ஹஸி, மைக்கல் ஹஸி, மிட்சல் ஜோன்சன், பிரெட்லீ, டிம் பெய்ன், ஸ்டீவ் ஸ்மித், ஷோன் ரைய்ட், ஷேன் வோட்சன், கமரூன் வைட்.

## காகில்ஸ் பூட் சிற்றியின் 153-து கிளை யாழ் நகரில் நாளை திறப்பு

அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான அனைத்துப் பொருட்களையும் இலகுவான முறையில், குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளக் கூடிய வகையில் இலங்கையின் அனைத்து மாவட்டங்களிலும் 152 விற்பனை நிலையங்களுடன் சிறந்த நுகர்வோர் சேவையை வழங்கி வரும் காகில்ஸ் பூட் சிற்றியின் 153ஆவது விற்பனை நிலையம் இல.54, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் நாளை காலை 8.30 மணிக்குக் கோலாகலமாகத் திறந்து வைக்கப்படுகின்றது.

வடக்கு வாழ் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதுடன் இலங்கையின் நிலையான அபிவிருத்திக்குச் சிறந்த பங்களிப்பை வழங்குவது என்ற எமது உயர் நோக்கின் ஓர் முக்கிய நிகழ்வாக இது கருதப்படுகின்றது என அந்நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

வாழ்க்கைக்கு அத்தியாவசியமான அனைத்துப் பொருட்களையும் அதிநவீன வசதிகளுடன் ஒரே கூரையின் கீழ் பெற்றுக் கொள்வதுடன் போதிய வாகனத் தரிப்பிட வசதியும் உண்டு.

புத்தம் புதிய பழவகைகள், காய்கறி வகைகள், மீன், இறைச்சி வகைகளையும் காகில்ஸின் பதப்படுத்தப்பட்ட இறைச்சி வகைகளையும் பெற்றுக் கொள்ளலாம்.

காகில்ஸ் பூட் சிற்றியில் பொருட்களைக் கொள்வனவு செய்து விசேட விலைக் கழிவுகளையும் சீட்டிழுப்புகள் மூலம் பரிசுகளையும் தினம் தினம் வெகுமதிகளையும் பெற்றுக் கொள்ளலாம் என அவர் தெரிவித்தார்.

தவத்திரு ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் குருஜீ நடாத்தும்
மகா ருத்ர பூஜை மற்றும்



உலகில் முதன் முறையாக
21000 மக்கள் இணைந்து
வழங்கும்
தேவார பாராயணம்
இடம்:- வெபர் மைதானம், மட்டக்களப்பு
திகதி:- 2011, ஜனவரி 22,
சனிக்கிழமை மாலை 3.30
அனைவரும் வருக அருளாசி பெறுக.
இவ்வரிய நிகழ்வில் கலந்து கொள்ள விரும்புவோர் பயண ஒழுங்குகளுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்-0777250879

## பாகிஸ்தான் அணிக்கு 274 ஓட்டங்கள் இலக்கு

(வெலிங்டன்)

நியூசிலாந்து அணியுடனான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான் அணி வெற்றி பெறுவதற்கு அவ்வணிக்கு இரண்டாவது இன்னிங்ஸில் 274 ஓட்டங்கள் எனும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

வெலிங்டன் நகரில் நடைபெறும் இப்போட்டியின் முதல் இன்னிங்ஸில் நியூசிலாந்து அணி 356 ஓட்டங்களையும் பாகிஸ்தான் அணி 376 ஓட்டங்களையும் பெற்றன.

போட்டியின் மூன்றாவது நாளான நேற்று முன்தினம் ஆட்ட முடிவின் போது நியூசிலாந்து அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் விக்கெட்டிழப்பின்றி 9 ஓட்டங்களைப் பெற்று இருந்தது. நான்காவது நாளான நேற்று அவ்வணி 293 ஓட்டங்களுடன் சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான மார்ட்டின் குப்தில் 73 ஓட்டங்களையும் பிரண்டன் மக்குலம் 64 ஓட்டங்களையும் பெற்றனர். இவர்கள் தவிர ரோஸ் ரெயிலர் மாத்திரமே அரைச் சதம் (52) பெற்றார்.

பாகிஸ்தான் அணி பந்துவீச்சாளர்களில் உமர்குல் 61 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும் அப்துர் ரஹ்மான் 119 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். மொஹமட் ஹபிஸ் 31 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

## சிறுவர் பகுதி திறப்பு விழா

சாவகச்சேரி பிரதேச சபையின் கைதடி பொது நூலகத்தில் சிறுவர் பகுதி திறப்பு விழா நாளை காலை 9 மணிக்கு இடம்பெறும்.

கைதடி உப அலுவலக பொறுப்பதிகாரி சி.பத்மநாதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் சாவகச்சேரி பிரதேச சபை முன்னை நாள் செயலாளர் வே.சிவராஜலிங்கம் பிரதம விருந்தினராகவும், சாவகச்சேரி பிரதேச சபை செயலாளர் செல்வி தி.தர்சினி சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். (ந)

## கிராம சேவையாளர் அலுவலகம் திறப்பு

(யாழ்ப்பாணம்)

அரியாலை கிழக்கு நாவலடியில் நாளை காலை 9மணிக்கு கிராம சேவையாளர் அலுவலகப் புதிய கட்டடம் திறந்துவைக்கப் படுகின்றது.

இப்புதிய கட்டடத்தை நல்லூர் பிரதேச செயலர் எஸ்.செந்தில்நந்தனன் திறந்து வைக்கவுள்ளார். (ந-5)

## தனிமையில் இருந்தவர் சடலமாக மீட்பு

(கரவெட்டி)

வியாபாரிமூலை ஓராங்கட்டைப் பகுதியில் தனிமையில் வாழ்ந்த ஒருவர் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கந்தசாமி சிவலிங்கம் (வயது 60) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

சம்பவ இடத்திற்கு நேரில் சென்ற பருத்தித்துறை நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் பிரேத பரிசோதனைக்காக சடலத்தை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ந-24)

## கிராம அபிவிருத்தி திணைக்களம் கைதடியில் இயங்கும்

(கைதடி)

வடக்கு மாகாணக் கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் தலைமையகம் எதிர்வரும் 24ஆம் திகதி முதல் கைதடியில் உள்ள முதியோர் இல்ல வளாகத்தில் உள்ள கட்டடத்தில் இயங்கவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகள் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் திருமதி ரமேஸ் விஜயலட்சுமியின் ஆலோசனைப்படி கிராம அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளர் ஜே.ஜே.பெலிசியன் மேற்கொண்டு வருகின்றார். (ந)

## நிவாரணம் கோரி மக்கள் போராட்டம்

(மட்டக்களப்பு)

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேச மக்களுக்கு நிவாரணம் வழங்கக் கோரி நேற்று மட்டக்களப்பு நகர நுழைவாயிலை முற்றுகையிட்டு வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மட்டக்களப்பு நகரை அண்டிய புதுநகர், நாவற்காடு,ஈச்சதீவு உள்ளிட்ட பல பகுதிகளிலிருந்து வருகைதந்த பொதுமக்கள் மட்டக்களப்பு கோட்டைமுனைப் பாலத்தின் ஊடான பிரதான வீதியில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமக்கு வழங்குவதற்காக கொண்டுவரப்பட்ட பொருள்கள் பிரதேச செயலகத்தில் வைக்கப் பட்டுள்ளதாகவும் அவற்றினை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் போராட்டத்தல் ஈடுபட்ட மக்கள் கோசம் எழுப்பினர். (ந-5)

## இடம்பெயர்ந்த முஸ்லிம்...

இடங்களுக்குத் திரும்பிக் கொண்டிருக்கின்றார்கள். இவ்வாறு திரும்புபவர்கள் அவர்களது சொந்தக்காணிகளிலும்பொது இடங்களிலும்தற்போது தங்கியிருக்கின்றார்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம் மக்களின் மீள்குடியேற்றத்திற்கென விசேட வேலைத்திட்டங்கள் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட வேண்டும் என மக்கள் சார்பில் பலரும் குரல் கொடுத்து வந்துள்ளனர்.

எனினும் போரினாலும் இராணுவ உயர் பாதுகாப்பு வலயங்களில் இருந்தும் இடம் பெயர்ந்துள்ள தமிழ் மக்களுக்கு வழங்கப்படுகின்ற உதவிகளைப் போன்றே முஸ்லிம் மக்களுக்கும் வழங்கப்படும் என்றும் அதற்கான வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாகவும் யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார்.

இரண்டாயிரத்துக்கும் குறைவான முஸ்லிம் குடும்பங்களே இதுவரையில் யாழ்ப்பாணத்திற்கு திரும்பியிருப்பதாகவும் இன்னும் நாலாயிரம் தொடக்கம் ஐயாயிரம் குடும்பங்களே யாழ்ப்பாணத்திற்கு திரும்பி வரவுள்ளதாகவும் இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்களின் நலன்களுடன் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்திருக்கின்றனர். (ந-5)

## யாழில்...

அங்கு தர்மலிங்கம் வெளியில் சென்றிருந்த நிலையில் அவரது மனைவியும் அயல் வீட்டுப் பெண் பிள்ளை ஒருவரும் இருந்துள்ளனர்.

அவர்களுடன் தெரிந்தவர் போல் கதைத்து விட்டு கைத்துப்பாக்கியால் மிரட்டி கைகளைக் கட்டிவிட்டு அலுமாரியிலிருந்த 50 பவுண் தங்க நகைகளை அபகரித்துத் திருடன் சென்றுள்ளான்.

இது தொடர்பில்வட்டுக்கோட்டைப்பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ந-5,6)

## பல்கலைக்கழக மாணவர்...

எதிர்வரும் மே மாதம் ஆரம்பமாகவுள்ள இப் பயிற்சிகளின் மூலம் முன்னேற்றமடையும். மற்றவர்களிடமிருந்து செவிமடுத்தல், தீர்மானங்களை மேற்கொள்ளல் போன்ற தலைமைத்துவ பண்புகளை அதிகரிக்க வேண்டும்.

நாட்டை அபிவிருத்தி செய்வதற்கு சிறந்த தலைவர்கள் எமக்குத் தேவை. சிறந்த தலை வர்கள் இன்றி நாட்டை அபிவிருத்தி செய்ய முடியாது.

இராணுவ முகாம்களில் இப்பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதால் தப்பவிப்பிராயமொன்று உள்ளது.

20ஆயிரம் மாணவர்கள் ஒரே சமயத்தில் தங்கவைப்பதற்குரிய வசதியைக் கொண்ட ஒரே இடம் என்பதாலேயே நாம் இராணுவ முகாம்களை தெரிவு செய்தோம் என உயர்கல்வி அமைச்சின் செயலாளர் கூறியுள்ளார். (ந-5)

## புலிகளின்...

பட்சீஸ்கூட்டர்(Sea Scooter) படகைகாங்கேசன் துறை கடலில் செலுத்தி மகிழ்ந்தார்.

இதன்போது காங்கேசன்துறை கடற்பரப்பில் விசேட கடற்படை அதிவேக தாக்குதல் பிரிவினர் பாதுகாப்பு வழங்கினர் என கொழும்பு ஊடகம் ஒன்று செய்திவெளியிட்டுள்ளது. (ந-5)

## தமிழ் அரங்கத்துடனான...

விட்டால் தாங்களும் அக் கூட்டமைப்பிலிருந்து விலகுவோம் என தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி தமிழ் தேசியக் கூட்டமைப்புக்குத் தெரிவித்துள்ளார்.

தமிழ்க்கட்சிகளின் அரங்கத்திற்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் தேர்தல் தொடர்பாக புரிந்துணர்வை ஏற்படுத்தி பொதுச் சின்னத்தில் போட்டியிடுவதற்கான யோசனைகள் முன்வைக்கப்பட்டன.

எனினும் தமிழ் அரங்கத்தில் உள்ள கட்சிகளில்ஆனந்தசங்கரி, சித்தார்த்தன்போன்றோரின் கட்சிகளை மட்டும் உள்வாங்க கூட்டமைப்புமுடிவு செய்திருந்தது. தமிழ் அரங்கத்தினுள் ஆரம்பம் முதல் முக்கிய பங்கு வகித்த சிவாஜிலிங்கம் போன்றோருடன் இணைந்து செயற்படுவதில் கூட்டமைப்பு தயக்கம் காட்டிவருகிறது. (ந-5)

## முகாமில் உள்ள புலி உறுப்...

ஆராய்ந்து அவர்களை விடுதலை செய்வது தொடர்பான விடயங்களை அவர்கள் சிபார்சு செய்யவுள்ளனர்.

அதற்கான முதற்கட்ட நடவடிக்கையாக இன்று அவர்கள் பூசா தடுப்பு முகாமிற்கு விஜயம் செய்யவுள்ளனர். அங்கு தடுத்து வைக்கப் கப்பட்டுள்ள புலிகளின் உறுப்பினர்கள் மற்றும் சந்தேக நபர்களுடன் கலந்துரையாடவுள்ளனர்.

பிரஸ்தாப நால்வர் குழுவின் தலைவராக பிரதி சட்டமா அதிபர் சுவீந்திர பெர்னான்டோ செயற்படவுள்ளார். சிரேஷ்ட அரச வழக்கறிஞர் குமாரத்னம், சேத்திய குணசேகர, தினால் இரத்நாயக்க ஆகியோர் அதன் ஏனைய உறுப்பினர்களாவர். (ந-5)

## புலிகளின் முக்கிய தலைவர்...

அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையில், இராணுவ ரீதியில் தோல்வியடைந்த விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் கனடாவுக்குக் குடி பெயர்வதை இலக்காகக் கொண்டுள்ளனர்.

கனடாவுக்குள் கடல் மார்க்கமாக பிரவேசிக்க முயற்சிப்பவர்களில் பெரும்பாலானவர்கள் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் அல்லது அதன் தீவிர ஆதரவாளர்கள்.

விடுதலைப் புலிகள் தமது நடவடிக்கைகளுக்கான கேந்திர நிலையமாக கனடாவை மாற்றி வருவதன் மூலம் நாடுகடந்த தலைமைக்கான தளத்தை கனடாவில் உருவாக்க முயன்று வருகின்றனர்.

கனடாவில் தற்போது மீள் இணைந்துள்ள விடுதலைப்புலிகளின் வலையமைப்புத் தொடர்பான தகவல்களை அந் நாட்டு உளவுத்துறையினர் பெருமளவில் திரட்டியிருப்பதுடன் அது தொடர்பான மேலதிக தகவல்களையும் கனேடிய அரசாங்கத்திற்கு வழங்கியுள்ளனர்.

தெற்காசிய நாடொன்றில் இருந்து இரு கப்பல்கள் இலங்கையர்களை ஏற்றிக் கொண்டு பிரிட்டிஷ், கொலம்பியாவுக்குச் செல்வதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாகவும்அக்கப்பல்களில் விடுதலைப் புலிகளின் 50 தலைவர்கள்மற்றும்போராளிகள்இருக்கலாம்என சந்தேகிக்கப்படுவதாகவும் அப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது. (ந-5)


COMPUTER FOR SALE
T.P : 021-222 4459, 0774192275
Intel LGA Processor 3.00
GIGABYTE LGA Mother Board
Ram DDR II, 1GB
Hard Disk Sata 80 GB (25,850/=)
DVD Writer
ATX Casing with Power Supply
15" HP / Compaq LCD Monitor
Keyboard, Optical Mouse
2.1 Laptop Woofer
இவை அனைத்தும் ரூபா : 25,850/=
Computer Table- 2850, UPS- 4000
STR COMPUTER SYSTEM
384, Navalar Road, Nallur, Jaffna.

DANIKA A-Z MARKET

Japan, England, American, Germany ஆகிய நாடுகளில் உற்பத்தி செய்யப்பட்ட ஜெனரெட்டர்கள் (பெற்றோல் & டீசல்), Computers, Loptop, றில் மெசின்கள் (1.Makita, 2.Black & Decker, 3. Bosch, 4. Makita, 5. Hitachi 6. Dewalt, 7. Aeg, 8. Skil) (A/C & Battery), ரூல்ஸ்கள், Bill மெசின்கள், தொலைபேசிகள், Camera (Vedio & Photo), DVD, VCD, VHS Players, Compirasar, கேற்றல்கள், தையல் மெசின்கள், Fax மெசின்கள், பொலித்தீன் பொதி செய்யும் மெசின்கள், வெல்டிங் மெசின்கள், Radio, Typing மெசின்கள் (புதிய, பழைய) இன்னும் பல பொருட்களை உங்களுக்கேற்ற விலையில் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்



(3536)

DANIKA A-Z MARKET
175A, சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்.

வீடு விற்பனைக்கு
சங்குவேலி தெற்கு மானிப்பாய் முச்சந்திக்கு அருகாமையில் அமைந்துள்ள 3 பரப்பு காணியுடன் சகல வசதிகளையும் கொண்ட வீடு உடன் விற்பனைக் குண்டு.
தொடர்பு : TP No.: 0779301745, 0776917155
(3544)



STUDY & WORK IN UK
விசா கிடைத்தபின்பே கல்லூரிக் கட்டணம் செலுத்தும் அரிய வாய்ப்பு
❀ பகுதிநேர வேலைவாய்ப்புக்கான 100% உத்தரவாதம்.
❀ 3 நாட்களுக்குள் CAS LETTER கிடைக்கும் வகையில் துரித ஏற்பாடுகள்.
❀ குடும்பமாக செல்லக்கூடிய வாய்ப்புகள்.
❀ தற்போது U.K யில் கல்வி கற்றுக் கொண்டிருப்பவர்களுக்கு கனடாவில் கல்வியைத் தொடரும் வசதிகளை செய்து தருகிறோம்.
அலுவலக நேரம்:- கிழமை நாட்களில் காலை 9.00-மாலை 4.00
அலுவலக விலாசம்:- 245, பலாலி வீதி, (Baby Photo அருகாமை) கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
தொடர்பு: 0770871616
(3540)



கலைமகள் அழகு நிலா
Beauty Academy
புதிய பிரிவுகள் ஆரம்பம்
பயிற்சி ஆரம்பம் 1ம் பிரிவு – 24. 01. 2011
2ம் பிரிவு – 29. 01. 2011
பயிற்சியின் நிறைவில் Diploma சான்றிதழ் வழங்கப்படும்.வயதெல்லைகள்கிடையாது.
பயிற்சியினை பயில விரும்பும் மாணவர்கள் அனுமதியைப் பெற்றுக்கொள்ளவும்.
குறிப்பு : சனி, ஞாயிறு தினங்களில் இடம்பெறும்.
★ Facial (10 வகை)
★ Eyebrow Threading
★ Pimple Treatment
★ Waxing
★ Hair Stratening (2 வகை)
★ Hair Perming (2 வகை)
★ Hot oil Massage
Hair Cutting
★ Hair Colouring
★ Hair dye
★ Pedeicure Manicure
★ Bleaching
★ கறுப்புக் காய்கள் இயந்திர மூலம் அகற்றப்படும்
★ Bridal make up (6 வகை)
★ Wedding Cake Icing
தையல் பயிற்சி
தொடர்புகள்: 0773719071
பயிற்சி நேரம் : மு.ப. 10 மணி - மதியம் 1 மணி வரை
அனுமதிக் கட்டணம்: 6000/=
கலைமகள் அழகுநிலா
390, பிரதான வீதி,பஸ்ரியன் சந்தி, யாழ்ப்பாணம்.
(சி–2190)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.01.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.